www.facebook.com / newsplustamil www.newsplus.lk twitter.com/newsplus.lk

# NEWS PLUS

உன்னதமான பயணத்தின் அடையாளம்

23 JANUARY 2022 - MONDAY

Pages - 09

E Paper # 025 / Y 01 / 2023

E-mail: editor@newsplus.lk

## 86 வயதில் எம்.பி.யாகும் பௌஸி



7ஆம் திகதி சத்தியப் பிரமாணம்

பாராளுமன்றம் எதிர்வரும் 7

02 »»

### இனப் பிரச்சினை தீர்வு முயற்சிகள்

# முஸ்லிம் அரசியலாளர்கள் மௌனம் கலைக்க வேண்டும்

### புத்திஜீவிகள் வேண்டுகோள்!

(சுஜப் எம்,காசிம்)

நாட்டின் தேசிய இனப்பிரச்சினையில் அண்மைக்காலமாக இந்தியா எடுத்து வரும் அக்கறையை முஸ்லிம் கோட்பாட்டாளர்கள் கண்டுகொள்ளாமல் இருப்பது,மற்றுமொரு அடிமைச்சாசனத்துக்கு அடிமையாகும் நிலையை ஏற்படுத்தப்போவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் எழுதப்படும் வரை,இதுபோன்றதொரு அறியாமையில் முஸ்லிம்

02 »»

### உள்ளூராட்சி தேர்தல் 2023

## வேட்புமனு தாக்கலில் தூரமாகியுள்ள கல்வி சமூகம்

### சமூக ஆர்வலர்கள் கவலை

(சுஜப் எம்,காசிம்)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட கட்சி சார்பாக முன்வந்துள்ளவர்கள் மற்றும் சுயேச்சைகளில் களமிறங்கியோரை கவனிக்கையில்,கல்விச் சமூகம் அரசியலிலிலருந்து தூரமாகியுள்ளதை

09 »»

## தேர்தலுக்கு முரணானவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### அனுர குமார திஸாநாயக்க



நிதியமைச்சக செயலாளர் தேர்தலுக்கான பணம் ஒதுக்காமல் தேர்தலுக்கு இடைஞ்சல் விளைவிப்பறேயானால் அது 3வருடங்கள் சிறை தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகும் அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மாளிகாவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் (20) மாலைநேரம் நடைபெற்ற மக்கள் கூட்டம் ஒன்றில் அவர் கருத்து தெரிவிக்கும் போதே தேர்தலுக்கான வைப்புப்பணம் பெற

02 »»

## இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டு எமது மக்களுக்கு உதவுங்கள்

### இந்திய தொழிலதிபர்களிடம் என்.எம். அமீன் வேண்டுகோள்



இலங்கை இன்று ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதனால் நாட்டில் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த மக்களை நெருக்கடியிருந்து நீக்குவதில் அயல் நாடுகளுக்கு குறிப்பாக இந்தியாவுக்கு பெருமளவில் உதவி செய்ய முடியும். அந்த வகையில் இலங்கையில்

02 »»

## எம்.பி. பதவியை துறந்து மாநகர சபைக்கு போட்டியிடுவதேன்

### விளக்குகிறார் முஜிபுர் ரஹ்மான்



ஏழரை வருடங்கள் இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய முஜிபுர் ரஹ்மான் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் முதல்வராக போட்டியிடுவதற்காக தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.முஸ்லிம் சமூகத்தை பொறுத்தவரை இந்த இராஜினாமா ஒரு பெரும் நஷ்டமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

துணிச்சலோடு முஸ்லிம் சமூகத்துக்காக கடந்த ஏழரை வருடகாலம் பாராளுமன்றத்தில் குரல்கொடுத்தவரே முஜிபுர் ரஹ்மான்.இது தொடர்பாக முஜிபுர்

02 »»

## அரசியலமைப்பு நிர்ணய சபையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லை

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்ற அரசியல் அமைப்பு நிர்ணய சபையில் 7 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.இவர்களில் சிவில் சமூகத்தின் சார்பில் முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் நியமிக்கப்படவில்லை.சிறுபான்மை இனத்தின் சார்பில் கலாநிதி ராமனுதம் மட்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஏ.எல். பரீட்சை காலத்திலும் மின்வெட்டு அமுல்

2022 உயர்தரப் பரீட்சை இருந்த போதிலும் இலங்கை மின்சார சபை தொடர்ந்து இரண்டு மணித்தியாலங்கள் 20 நிமிட மின்வெட்டினை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

நாளை ஏ முதல் எல் மற்றும் பி முதல் டபிள்யூ குழுக்களுக்கு பகலில் ஒரு மணி நேர மின்வெட்டு மற்றும் இரவில் ஒரு மணி நேரம் 20 நிமிட மின்வெட்டுக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## மன உறுதியுடன் பரீட்சைக்கு முகங்கொடுங்கள்

### மனோ தத்துவ நிபுணர் அஸ்ஹர் அன்சார்



கடந்த இரண்டு வருடங்களாக பல சங்கடங்களை, சவால்களை சந்தித்து இப்போது பரீட்சைக்கு நீங்கள் முகம் கொடுப்பதற்கு தயாராக இருப்பீர்கள்.

இதற்கு முன்பு மாணவர்கள் காணாத பல தடைகளை நீங்கள் கண்டு அவற்றை வாழ்க்கையில் நல்லதொரு அனுபவமாக மாற்றியமைத்திருப்பீர்கள்.

”உங்கள் பரீட்சை இலகுவாகவும் நல்ல முடிவை

02 »»

## இடைநிறுத்தப்பட்டது இலங்கை கால் பந்து சம்மேளனம்

### பீபா அதிரடி முடிவு

கால்பந்தின் உயர்மட்ட உலக அதிகாரசபையான FIFA, இலங்கை கால்பந்து சம்மேளனத்தை (FFSL) மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தியுள்ளது.

“எனவே குகுளுடு பிரதிநிதி மற்றும் கிளப் அணிகளுக்கு தடை நீக்கப்படும் வரை சர்வதேச போட்டிகளில் பங்கேற்க உரிமை இல்லை” என்று FIFA அனைத்து உறுப்பினர் சங்கங்களுக்கும் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

FIFA அதன் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் அதன் துணை நிறுவனங்களுக்கும் “FFSL அல்லது அதன் எந்த அணிகளுடன் எந்த விளையாட்டு ஒப்பந்தத்திலும் ஈடுபட வேண்டாம்” என்று அறிவுறுத்தியுள்ளது.

அடுத்த FIFA காங்கிரஸுக்கு முன் இடைநீக்கம் நீக்கப்படலாம் என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

### அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி: பரீட்சைகள் ஆணையாளர்

நாடளாவிய ரீதியில் 2200 பரீட்சை நிலையங்களில் இன்று ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு இலங்கை

02 »»

## முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கோட்பாட்டாளர்கள் இருந்தனர். இதனால்,இதன் விளைவை இன்று வரை முஸ்லிம்கள் அனுபவிக்கின்றனர்.இந்த 13இல்,வழங்கப்பட்ட காணி,பொலிஸ் அதிகாரங்களே ஒருமொழியைப் பேசும் சமூகங்களுக்குள் சிறுபான்மை,பெரும்பான்மை எனும் வேறுபாடுகளை ஏற்படுத்தியது. இந்நிலையில்,இதனை மீண்டும் அமுல்படுத்துமாறு இலங்கை அரசுக்கு தொடர்ந்து இந்தியா அழுத்தங்களை வழங்குவது குறித்து முஸ்லிம் கோட்பாட்டாளர்கள் கவனம் எடுப்பது அவசியம்.

பொலிஸ் அதிகாரங்களால் முஸ்லிம்களுக்கு பெரிதாக பிரச்சினைகள் ஏற்பட்டிராவிடினும், காணி அதிகாரங்கள்தான் இம்மாநிலங்களில் முஸ்லிம்களின் இருப்புக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தின.வடகிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த போதிலும்,தனியாகப் பிரிக்கப்பட்டிருந்த நிர்வாகங்களிலும் இதுகுறித்த நெருக்கடிகளை முஸ்லிம்கள் எதிர்கொண்டனர். எனவே,இவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்பட்டு ஒருமொழிச் சமூகங்களுக்குள் முரண்பாடுகள் ஏற்படாமல்,இச்சமூகங்களை வழிநடாத்தும் பொறுப்புக்களை ஒரு மொழிச் சமூகங்களது தலைமைகள் பாரமெடுப்பது அவசியம்.இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்தான்,இந்திய - இலங்கை ஒப்பந்த காலத்தில இலங்கைக்கான இந்தியத் தூதுவராக இருந்தவர். இதனால் இது குறித்த அனுபவங்கள் அவரிடம் அதிகமுள்ளன.இதைப் பயன்படுத்துவதில் தமிழ் தேசியம் உச்சளவு கவனம் செலுத்தியிருந்தன.

ஆனால்,முஸ்லிம் கோட்பாட்டாளர்கள் இவரின் வருகையை இம்முறை கண்டுகொள்ளவில்லை.இதற்கான காரணங்கள்,பின்னணிகளை தெரிந்து கொள்வதில் முஸ்லிம் புத்தி ஜீவிகள் அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இச்சந்திப்புக்களில்,முஸ்லிம் கோட்பாட்டாளர்களைத் தவிர்த்துக் கௌள தமிழ் தேசியம் விரும்பியதா?அல்லது முஸ்லிம் கோட்பாட்டாளர்கள் இதிலிருந்து அக்கறையிழந்து தேர்தல் காலத்துக் களியாட்டங்களில் காலங்கடத்தினரா?

இல்லையென்றால்,முஸ்லிம் கோட்பாட்டாளர்களையும் தமிழ் தேசியத்துக்குள் உள்ளடக்க இந்தியா விரும்புகிறதா இல்லை விரும்ப வைக்கப்படுகிறதா?அவ்வாறு வி ரும்பவைக்கப்படுவதானால்,அத ற்குப்பின்னாலுள்ள பின்னணிகள் எவை?இவைகளைப் புரிந்துகொள்ள முஸ்லிம் கோட்பாட்டாளர்கள் கவனம் செலுத்துவது அவசியம்.இம்மாத இறுதியில் ,சர்வகட்சி மாநாடு கூட்டப்படவுள்ளதால், அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை அமுல்படுத்துவதில் இந்தியா எடுத்து வரும் அக்கறை,செலுத்தி வரும் அழுத்தங்களை அறிவதைத் தவிர வேறு பணிகள் எதும் இந்த முஸ்லிம் கோட்பாட்டாளர்களுக்கு அவசியம் இல்லை.மேலும்,காலத்தை கைவிட்டு கூக்குரலிடுவதில் அர்த்தமும் இல்லை. காரணம்,நிறைவேற்று அதிகாரத்தால் நிறைவேற்றப்படவுள்ள விடயங்களே இவை, எனவே,பாராளுமன்றத்தில் இது குறித்து கவனம் செலுத்தலாம் என்ற எண்ணத்தில் முஸ்லிம் கோட்பாட்டாளர்கள் செயற்படவும் கூடாது,

## தேர்தலுக்க்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வேண்டாம் என கடிதம் ஒன்றை தேர்தல் ஆணையகத்திற்கு அனுப்பியிருந்த அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் நீள் பண்டார ஹபுஹின்ன அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரா குமார திசநாயக மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“தேர்தல் வைக்க பணம் இல்லை, தேர்தல் வைத்தால் மருந்து இல்லை, தேர்தல் வைத்தல் எரிபொருள் இல்லை என்று சொல்லுகின்றார்களே ஆனால் தேர்தல் வைத்தால் செலவாவது வெறுமனே 8 பில்லியனே. ஆனால் சீனி ஊழல் மற்றும் 15பில்லியன். சீனி ஊழலில் மட்டும் இரண்டு தேர்தல்கள் வைக்கலாம். ஒரு தேர்தலை கூட வைக்க முடியாத அளவுக்கு நீங்கள் இருக்கிறீர்கள் என்றால் நீங்கள் கட்டாயம் வெளியேற்றப்பட வேண்டும். ஆகையால் தேர்தல் கட்டாயமானது. பொருளாதாரம் சிறிதளவு சரி ஒழுங்காக இருக்குமெனின் சற்று கால அவகாசம் தர முடியுமாக இருந்திருக்கும் ஒரு 2 அல்லது 3 மாதங்கள். பணம் சம்பந்தமாக முடிவெடுக்கும் பலம் இருப்பது பாராளுமன்றத்துக்கு. பாராளுமன்றத்தில் தேர்தல் வைப்பதற்கான பண ஒதிக்கீட்டுக்கு அனுமதி வழங்கப்படிருக்கையில் தவிசாளருக்கு எந்த வகையில் அதை தராமல் இருக்க முடியும்.

## எம்.பி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ரஹ்மான் அவர்களிடம் கேட்ட போது,

நான் உண்மையிலே இந்த அரசாங்கத்ததை வீட்டுக்கு அனுப்புகின்ற வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காகவே எனது பெருமதியான பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.இந்த இடத்தில் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்காவிட்டால் மக்கள் மிகவும் நெருக்கடிகளை எதிர்காலத்தில் எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.அந்த நோக்கத்திலே எனக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் இந்த அரசாங்கத்தை தோற்கடிக்கின்ற இயக்கத்தின் வெற்றிக் கம்பத்தை ஆரம்பிப்பதற்காக நான் இத் தேர்தலில் போட்டியிடுகிறேன்.நான் இந்த பதவிக்கு போட்டியிடாவிடின் கொழும்பு மாநகர சபை தவறான சக்திகளின் கைகளுக்கு செல்லலாம். அது பெரும் பாதிப்புகளை குறிப்பாக முஸ்லிம் சமூகத்துக்கும் எதிர்காலத்தில் ஏற்படலாம்.எனவே தான் விளைவுகள் எப்படியிருந்தாலும் பாராளுமன்றத்திலிருந்து விடைபெற்று மாநகர சபைக்கு நான் போட்டியிடுகின்றேன்.

மாணவர் பருவத்திலிருந்தே அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு சமூகத்தின் உரிமைக்காகவும் நாட்டு மக்களின் உரிமைக்காகவும் குரல்கொடுத்த முஜிபுர் ரஹ்மான் இம் முறை கொழும்பு மாநகர சபையினூடாக தனது போராட்டத்தை முன்னெடுப்பதற்கு களம் இறங்கியுள்ளார். மாகாண சபை அரசியல் மூலம் அரசியலுக்கு பிரவேசித்த இவர் மேல்மாகாண சபையில் பணிபுரிந்த பிறகு பாராளுமன்றத்தில் முதற் பருவத்தில் நாளரை வருடமும் , இரண்டாவது பருவத்தில் இரண்டரை வருடகாலமும் பணிபுரிந்து இப்போது தனது பதவியை இராஜினாமா செய்து கொழும்பு மேயராக போட்டியிடுகின்றார்.

## 86 வயதில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆம் திகதி கூடும் பொழுது கொழும்பு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக அல்ஹாஜ் ஏ.எச். எம் பௌசி சத்தியபிரமாணம் செய்து பதவியேற்க உள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இராஜினாமா செய்து கொழும்பு மாநகர சபை தேர்தலில் முதல்வர் பதவிக்கு போட்டியிடுவதன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கே ஐக்கிய மக்கள் சக்திப் பட்டியலில் அடுத்து இருந்த அல்ஹாஜ் ஏ. எச்.எம் பௌசி நியமிக்கப்பட்டுள்ளார்.மூத்த அரசியல்வாதியான

அல்ஹாஜ் ஏ. எச்.எம் பௌசி மேல்மாகாண சபை, கொழும்பு மாநகர சபை ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தியதோடு 1990 ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் பதவியை வகித்த பௌசி பின்பு மேலும் பல அமைச்சுக்களை மஹிந்த ராஜபக்ச அரசிலும் , சந்திரிக்கா பண்டாரநாயக்க அரசிலும் பதவி வகித்தார்.”எல” பௌசி என பெரும்பான்மை மக்களால் பாராட்டப்படுகின்ற ஒரு அமைச்சராக இருந்தவர் ஆவார்.

கொழும்பு மத்திய பகுதியை நீண்டகாலமாக பிரதிநிதித்துவப்படுத்திய பௌசி கடந்த பொதுத்தேர்தலில் மிகச் சிறிய வாக்குத் தொகைகளால் தோல்வி கண்டார்.அதன்படி பட்டியலில் நான்காவது இடத்தில் இருந்தவர் இப்போது பட்டியலில்

அடுத்த பெயராக இருக்கும் பௌசி எம்பியாக நியமிக்கப்பட்டுள்ளார்.இவரது பெயர் இன்று அல்லது நாளை வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது. 1937 ஆம் ஆண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி பிறந்த பௌசி மூத்த முஸ்லிம் தலைவர்களில் ஒருவராக திகழ்கிறார்.

## மன உறுதியுடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தரக்கூடியதாகவும் அமைய மனம் திறந்து பிரார்த்திக்கிறோம்”

பாடங்களைப் படித்து பரீட்சைக்கு தயாராக இருக்கும் நீங்கள் மனதாலும் தயாராக வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும்.

எந்த ஒன்றை சாதிப்பதற்கும் மனபலம் முதன்மையானது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

ஆதலால் நேர்மறையான மனப்பாங்குடன் இந்தப் பரீட்சைக்கு முகம் கொடுப்போம்.

அன்பின் மாணவர்களே!

‘நேர்மறையான மனப்பாங்கு என்பது நாம் செய்யப்போகும் விடயங்கள் பற்றி சாதகமாக சிந்திப்பதன் மூலம் எம் வாழ்க்கையை நலவின் பக்கம் மாற்றிக்கொள்வதைக் குறிக்கும்’.

எனவே ...

- நாம் செய்யப் போகும் விடயத்தில் நம்பிக்கை வைப்போம்
- எங்களை நாம் எமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வோம்
- எமது ஆற்றல்கள் மீது நம்பிக்கை வைப்போம்
- எங்களுக்காக எங்களை நேசிப்போம்
- ‘என்னால் முடியும்’,

“நான் படித்திருக்கிறேன்“

‘நான் முகம் கொடுப்பேன்’ என்று உறுதியாக நம்புவோம்..

- எங்களை நாங்களே வாழ்த்திக்கொள்வோம்..

அன்பின் மாணவர்களே...

பரீட்சையின் போது சிலசமயம் பயம் மற்றும் மனக்குழப்பம் என்பன ஏற்படலாம்.

அந்த நேரத்தில் கவலைப்படவோ பதற்றப்படவோ கூடாது.

நாம் முகம் கொடுக்க சங்கடப்படும் விடயங்களில் இருந்து எம்மைக் காப்பாற்றிக்கொள்ளவும் விரைவான நடவடிக்கை எடுக்கவும் இது போன்ற எதிர்மறை உணர்ச்சிகள் துணைபுரிகின்றன.

நம்மைச் சுற்றியுள்ள பிற விடயங்களால் மனம் திசை திருப்பப்படுவதையும் தடுக்க அவை உதவுகின்றன.

உறுதியாகவும்

உற்சாகமாகவும்

அவதானமாகவும் இருந்தால் பதற்றம் ஏற்படுவதைத் தடுத்துக்கொள்ளலாம்.

அன்பின் மாணவர்களே!!

பரீட்சையை ஒரு அச்சுறுத்தலாக பார்க்காமல் ஒரு சவாலாக பார்ப்போம்.

பரீட்சை வாழ்வின் ஒரு நிகழ்வாகும்.

ஒரு நிகழ்வை சவாலின் மறுவடிவமாக பார்க்கும்போது அது எமது செயல்திறனை அதிகரிக்கச் செய்துவிடும்.

பரீட்சையில் தோற்றுவிடுவோமோ என்று சிந்திக்காமல் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பாக பரீட்சை இருக்கிறது என்று சிந்திக்க மனதிற்கு இடம் கொடுப்போம். மனம் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளும்.

அன்பின் மாணவர்களே...

- படிக்கும் போது ஏற்படும் தடங்கல்களை பொறுத்துக்கொள்வோம்..
- சவால்கள், சங்கடங்கள் வாழ்க்கையில் எந்தக்கட்டத்திலும் வரலாம் என்பதை புரிந்துகொள்வோம்...
- வழக்கமாக நல்ல செயல்களை செய்து வாருவோம்...
- மனம் திறந்து பிரார்த்தனை செய்வோம்..
- உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக்கொள்வோம்...
- போதியளவு உணவு உட்கொள்வோம்..
- உடலுக்கு தேவையான அளவு உறக்கத்தை பெற்றுக்கொள்வோம்..
- சுகாதார வழிமுறைகளை தவறாது பின்பற்றுவோம்..

அன்பின் மாணவர்களே..!

- நாங்கள்தான் எங்களை அலங்கரிக்க வேண்டும்
- நாங்கள்தான் எங்களுக்கு ஒளிவிளக்காக இருக்கவேண்டும்
- நாங்கள்தான் எங்களை தைரியப்படுத்த வேண்டும்.

என்பதை உறுதியாகப் புரிந்து மனதைரியத்துடன் இந்த சவாலுக்கு முகம் கொடுப்போம்.

நீங்கள் மனவுறுதியுடன் பரீட்சைக்கு முகம் கொடுப்பீர்கள்....

நீங்கள் நல்ல பெறுபேறுகளை பெற்றுக்கொள்வீர்கள்....

வாழ்த்துக்கள்.....

## இலங்கையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எங்களுடைய வர்த்தக முயற்சிகளில் முதலீடுகளை செய்து இலங்கைக்கு உதவுமாறு நாம் இந்திய வாழ் முஸ்லிம்களுக்கு விஷேட வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்திய முஸ்லிம் லீக்கின் அழைப்பையேற்று சென்னை வந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தூதுக்குழுவினருக்கு காயல்பட்டணத்தில் தொழிலதிபர் வாவு எஸ் காதிர் தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டாளரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலின் தலைவருமான என்.எம்.அமீன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் நெருக்கமான தொடர்பு இருந்து வருகின்றது. குறிப்பாக தொப்புள் கொடி உறவு இருந்து வருவதாக எமது மூதாதையர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக காயல்பட்டணம், கீளக்கறை போன்ற இடங்களில் உள்ள முஸ்லிம்களுக்கும், இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கும் நிறைய தொடர்புகள் இருக்கின்றன. அநேகர் உறவினர்களாகவும் இருக்கிறார்கள். எமது நாடு இன்று பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. அண்மைக்கால பொருளாதார நெருக்கடி, கொரோனா தொற்று பரம்பல் என்பன காரணமாக நாட்டிலே பாரியதொரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்த பின்னடைவிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு கட்சி, இன, மத, பேதமின்றி அனைவரும் பாடுபடவேண்டியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே தென்னிந்திய வாழ் முஸ்லிம்கள், முஸ்லிம் வர்த்தகர்கள் மற்றும் தொழிற்பிரமுகர்களுக்கு நாம் விடுக்கும் வேண்டுகோள் எங்கள் நாட்டில் வந்து முதலீடு செய்யுங்கள். அதன் மூலம் எங்களுடைய நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், எமது நாட்டில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்க முடியும்.

இந்திய முஸ்லிம் லீக்கின் அழைப்பை ஏற்று முஸ்லிம் மீடியா போரம் உலக தூதுக்குழுவொன்றை இங்கே அழைத்து வந்திருக்கிறது. நாங்கள் கடந்த சில தினங்களாக பல்வேறு இடங்களுக்கு சென்றோம். இஸ்லாத்தின் ஆரம்ப கால வளர்ச்சியின் முக்கிய கட்டங்கள் காயல்பட்டணம் உட்பட பல இடங்களில் காணப்படுகின்றன. இவற்றில் 1300 வருடங்களுக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் கீளக்கரையிலே இருப்பதை எங்களால் அவதானிக்க முடிந்தது.

எங்களது மூதாதையர்கள் இங்கே வந்து இஸ்லாத்திற்கான தொடர்பை வளர்த்திருக்கிறார்கள். காயல்பட்டணத்திலே இருக்கின்ற வாவு வஜீஹா கல்லூரி ஆயிரத்துக்கும் மேற்பட்ட யுவதிளுக்கு கல்வியை போதிக்கின்றது. அந்தக் கல்விக் கல்லூ ரியை பார்வையிட்டபோது எமக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. பல நண்பர்கள் இணைந்து இந்தக் கல்விக் கல்லூ ரியை சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

தொழிலதிபர் வாழ்வு சம்சுதீன் அவர்களால் நடாத்தப்படும் வஜிஹா கல்லூரியில் 1500க்கும் மேற்பட்ட மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். இந்த கல்லூரியில் கல்வி பயில்வதங்கு இங்கையிருந்தும் எமது மாணவிகளுக்கு சலுகை அடிப்படையில் சில புலமை பரிசில்களை வழங்குமாறு நாம் இந்தக் கல்லூரி ஸ்தாபகர் மற்றும் பணிப்பாளர் சபையிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

பாதிக்கப்பட்டிருக்கும் எமது நாட்டு மக்களுக்கு இது பெரும் உதவியாக அமையுமென்றும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். காயல்பட்டிணத்துக்கும், இலங்கைக்கும் மிக நீண்ட நெடுங்கால தொடர்பு இருக்கின்றது. இந்தக் கல்லூரியின் சின்னங்களில் மாணிக்கக் கற்களை பதிப்பிருக்கிறார்கள். இதன் ஸ்தாபகர் அதிக காலம் இலங்கையிலே தொழில் செய்தவர். இன்னும் தொழில் செய்கிறார். இரத்தினப்புரியிலே அலோசியஸ் கல்லூரியிலே படித்தவர். அந்த நன்றிக்காக கல்லூரியில் ஒவ்வொரு கட்டடத்திலும் மாணிக்கக் கற்களை சின்னங்களாக பதித்திருக்கிறார். நாங்கள் இலங்கையிலிருந்து தான் சம்பாதித்தோம் என்ற அந்த நன்றிக்கடனை வெளிப்படுத்துவதற்காகவே அவ்வாறு செய்திருக்கிறார்கள். அவர்களிடம் நாங்கள் கேட்பது, நீங்கள் பல்வேறு வர்த்தக துறையிலே ஜாம்பவானாக திகழ்கிறீர்கள். ஆகவே எங்களுடைய நாட்டில் உங்களுடைய வர்த்தகர்களை முதலீடு செய்ய ஊக்குவிக்குமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ இப்திகார், உதவிப் பொதுச் செயலாளர்களான ஜாவித் முனவ்வர், சாதிக் சிஹான் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## உயர்தர...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL), இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் Lanka Electricity Company (LECO) உறுதியளித்துள்ளதாக அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

“தேர்வு நேரங்களில் தொடர்ந்து மின்சாரம் வழங்குமாறு ̎ருஊளுடு, ஊநுடீ மற்றும் டுநுஊழு விடம் கோரிக்கை விடுத்துள்ளோம், அவர்கள் உறுதியளித்துள்ளனர்,” என்று அவர் கூறினார்.பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை (NIC), கடவுச்சீட்டு, ஒட்டுநர் உரிமம் அல்லது NIC க்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ஆட்கள் பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள ஆவணத்தை சமர்ப்பிக்கலாம் என்று அவர் கூறினார்.

பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டை (NIC), கடவுச்சீட்டு, ஒட்டுநர் உரிமம் அல்லது NIC க்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சைக்கு உட்படுத்துவதற்காக ஆட்கள் பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள ஆவணத்தை சமர்ப்பிக்கலாம் என்று அவர் கூறினார்.

பரீட்சையின் போது எந்தவொரு பரீட்சார்த்தியும் தம் கைவசம் ஸ்மார்ட்போன், ஸ்மார்ட் கைக்கடிகாரம் அல்லது புளூடூத் சாதனங்களை வைத்திருக்க முடியாது எனவும், விதியை மீறியதாகக் கண்டறியப்பட்டால், ஐந்து வருடங்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தடை விதிக்கப்படும் எனவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்த ஆண்டு கட்டுரை வகை வினாக்களுக்கு கூடுதலாக பத்து நிமிடங்கள் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.2200 மையங்களில் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு 278,196 பாடசாலை பரீட்சார்த்திகளும் 53,513 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பதிவு செய்துள்ளனர்.

# “ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தி பொருளாதார உதவிகளை துரிதப்படுத்துவோம்”

## -காலி மாநகர ஐ.தே.க வேட்பாளர் றாசிக் அன்வர்-

ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் கரங்களைப் பலப்படுத்தும் நோக்கிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்ததாக காலிமாநகர சபை ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் றாசிக் அன்வர் தெரிவித்தார். தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவித்தார்.

வேட்பு மனு தாக்கலின் போது பாராளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.க காலி மாவட்ட தலைவருமான வஜிர அபேவர்தனவும் பிரசனமாகியிருந்தார்

வேட்பாளர் றாசிக் அன்வர் மேலும் கூறியதாவது,

அதலபாதாளத்தில் சென்றுகொண்டிருந்த நாட்டை மீட்கத் துணிச்சலுடன் முன்வந்த தலைவர் ரணில்விக்ரமசிங்க. நாட்டின் மூத்ததும் முதல் கட்சியுமான ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுடன் பழகிய இவரிடம் தலைமைத்துவப் பண்புகள் நிறையவுள்ளன. சர்வதேசத்தில் இவருக்குள்ள செல்வாக்குகள் பொருளாதார உதவிகள் கிடைப்பதற்கு வழிகோலும். உள்ளூராட்சி தேர்தலில் அமோகஆதரவு வழங்கி மக்கள் ஆணையை நிரூபிப்பதற்கு மக்கள் தயாராவது அவசியம். அப்போதுதான், நாட்டுக்கு கிடைக்கவுள்ள பொருளாதார உதவிகள் விரைவில் வந்து சேரும்.



இன்றுள்ள நிலையில்,சர்வதேசத்தின் நன்மதிப்பை வென்ற நமது ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சியைப் பலப்படுத்த மக்கள் முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

## நாட்டின் இனப்பிரச்சினை தீர்வுக்கான முஸ்லிம்கள் சார்பாக சமத்துவ மக்கள் முன்னணியின் பரிந்துரை

### சமத்துவ மக்கள் முன்னணி – சட்டத்தரணி டாக்டர் யூசுப் தெரிவிப்பு

1. வடகிழக்கில் யுத்த காலத்தில் இழந்த 92000 ஏக்கரிற்கு மேற்பட்ட முஸ்லிம்களின் காணிகளை தமிழ் தரப்பு, அரசதரப்பு முஸ்லிம்களிடம் மீள கையளிக்க வேண்டும்.

2. பிரதேச செயலகங்களிற்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களை எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டு(குறிப்பாக வடகிழக்கில்) யாப்பின் 12, 27 (2) (ந) சரத்துகளின் பிரகாரம் இனவிகிதாசாரப்படி நிலப்பங்கீட்டில் நடைபெற்றுள்ள அநீதிகள் சரிசெய்யப்பட வேண்டும்.

3. இதே போன்று வடகிழக்கிற்கு வெளியே வாழுகின்ற சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். சிறுபான்மை சமூகத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் சட்ட சீர்திருத்தங்களும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறிமுறையில் அவசியமான மாற்றங்களும் கொண்டு வரப்பட வேண்டும்.

4. முஸ்லிம் சமூகம் முதற் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிற்கு நிரந்தரமாக முஸ்லிம் அரசாங்க அதிபர் நியமனம் உறுதி செய்யப்பட வேண்டும்.

5. வடகிழக்கில் அதிகாரப்பகிர்வு செய்யப்படவேண்டுமாக இருந்தால் வடகிழக்கு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேச செயலகங்கள், கிராம எல்லைகளை நிலத் தொடர்பற்ற முறையில் முஸ்லிம்களின் இனவிகிதாசாரம் மாறுபடாத வகையில் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு அவை இணைக்கப்பட்டு எல்லை நிர்ணய குழுவினூடாக மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். பின்னர் மீள்நிர்ணயம் செய்யப்பட்ட நிலங்களை இணைத்து இரண்டு முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு சமத்துவ உரிமை சமூகங்களிடையே உறுதி செய்யப்பட வேண்டும்.

6. வடகிழக்கு இணைப்பு செய்யப்படுமானால் இரண்டு உருவாக்கப்பட்ட மாவட்டங்களையும் இணைத்து தனியான முஸ்லிம் மாகாணம் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு நடைபெற்றால் நாட்டை பிளவுபடுத்த முடியாத ஒற்றையாட்சி உரிமையை மத்திய அரசிடமும் தாங்கள் விரும்பும் அபிவிருத்தியை மேற்கொள்ளக் கூடிய உரிமையை மாகாணங்களிடமும் கிடைக்கச் செய்யும் வகையில் ஏநுஆஐகுநுனுநுசுயுடு என்று சொல்லப்படக் கூடிய அரைச்சமஷ்டி ஆட்சி முறை மூலமாக இந்த நாட்டில் அதிகாரப்பகிர்வுக்கு முஸ்லிம்கள் உடன்படலாம். (குறிப்பு: வடகிழக்கிற்கு வெளியே சிறுபான்மையினரின் பாதுகாப்பு உள்ளிட்ட ஏனைய உரிமைகள் பாதுகாக்கப்படக் கூடிய உரிமை பாதுகாப்பு பொறிமுறை உள்ளடக்கப்பட வேண்டும்)

7. மேற்கூறப்பட்ட மறுக்கப்பட்ட முஸ்லிம்களின் உரிமைகளை வழங்க எந்த பிரதான கட்சி உடன்படுகிறதோ அந்த கட்சிக்கு வாக்களிக்க முஸ்லிம்கள் முன்வரவேண்டும் என்று பிரச்சாரம் செய்ய தயாராக இருக்கின்றோம்.

இனவாதம், மதவாதம், பிரதேசவாதமெல்லாம் ஒழிய வேண்டும். சமத்துவ சமூக ஆட்சி மலர வேண்டும்

## விரிவுரையாளர் ஜுமான் விபத்தில் மரணம்



பேராதனைப் பல்கலைக்கழக கணித சிரேஸ்ட விரிவூரையாளர் ஜுமான் வீதிவிபத்தில் காலமானார்.

இவரது ஜனாஸா நல்லடக்கம் நேற்று அவரது ஊரில் நடைபெற்றது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முன்னாள் தலைவரும் ஏற்பாட்டாளருமான என் எம் அமீன் தலைமையில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள போரத்தின் பிரதிநிதிகள் ராமேஸ்வரத்தில் உள்ள இந்தியா வின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் வாழ்ந்த இல்லத்தை நேரில் பார்வையிட்டனர் . இதன் போது போரத்தின் தலைவி திருமதி புர்கான் பீ இப்திகார் தலைமையில் அப்துல் கலாமின் பேரனான சேக் சலீமுடன் எடுத்துக் கொண்ட படம். (எம் எஸ் எம் ஸாஹிர்)









# வட்டுக்கோட்டை தமிரசு கட்சி அலுவலகத்தில் 2023ஆம் ஆண்டிற்கான பொங்கல் நிகழ்வு




வட்டுக்கோட்டை தமிரசு கட்சி அலுவலகத்தில் 2023ஆம் ஆண்டிற்கான பொங்கல் நிகழ்வு வட்டுக்கோட்டை தொகுதி தமிழரசுக்கட்சி தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக அலுவலக முன்றலில் சம்பிரதாயபூர்வ பொங்கல் நிகழ்வு இடம்பெற்று தொடர்ச்சியாக ஈஸ்வரபாதம் சரவணபவன் அறக்கட்டளை அரங்கில் பொங்கல் சார் கலை நிகழ்வுகள் உதயவாழ்வு தையல் கற்கை மாணவர்கள் மற்றும் சூரிய கற்கைகள் சிங்கள நிறுவன மாணவிகளால் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், உதய வாழ்வு நிறுவன தலைவர் யசோதா சரவணபவன்,வலி மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெயந்தன்,உதய வாழ்வு தையல் பயிற்சி நெறி ஆசிரியர் மாணவர்கள், இலவச சிங்கள கற்கை நெறி மாணவர்கள்,பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கண் விழி வெண்படல சத்திர சிகிச்சைக்கு உதவும் லயன்ஸ் கழகம்



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பிரித்தானியாவில் வசிக்கும் இலங்கையரான லயன் றிஸ்வி ரவுப் இலங்கையில் உள்ள மூவின மக்களுக்கும் கண் சத்திர சிகிச்சைக்கான உதவிகளை வழங்கி வருகின்றார்.

அன்மையில் அவர் இலங்கை வந்தபோது அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தமது இலவச சேவை பற்றி தெரிவித்தார்.

பிரித்தானியாவின் லயன்ஸ் கழகத்தின் மாவட்ட கவர்னராக இருக்கும் றிஸ்வி ரவுப் நீண்டகாலமாக இலங்கை மக்களுக்கு கண் சத்திரசினிச்சை அதாவது கண் விழி வெண்படல சத்திர சிகிச்சைக்கு இனமத பேதமின்றி உதவி வருகின்றார். இவர் இலங்கையில் உள்ள லயன்ஸ் கழகத்துடன் இணைந்து சத்திர சிகிச்சைக்குத் தேவையான சகல பொருட்களையும் வழங்கி மேற்படி சமுக சேவையை இலவசமாக செய்து வருகின்றார்.

இலங்கையில் உள்ள லயன்ஸ் கழகம் வசதி குறைந்த சத்திரச் சிகிச்சை தேவையானவர்களை இனங்கண்டு நாடளாவிய ரீதில் உள்ள கண் சத்திர சிகிச்சை வைத்தியசாலகளினூடாக இந்த இலவச சேவையை வழங்கி வருகின்றனர்.

இலங்கையில் இதுவரை 1250 பேருக்கு பிரித்தானியாவில் உள்ள தமது ரெஸ்ட்ரோ சைட்ஸ் சிறிலங்கா திட்டத்தின் மூலம் பிரித்தானிய இலங்கை லயன்ஸ் கழகம் இணைந்து கண் விழிவெண்படல சத்திர சிகிச்சையை மேற்கொண்டு வந்துள்ளதாகவும் இம்முறை சுமார் 500 பேருக்கான சத்திர சிகிச்சை உபகரங்களை தான் கொண்டு வந்து வழங்கியுள்ளதாகவும் லயன் றிஸ்வி ரவுப் தெரவித்தார். இவ்வாறு நாங்கள் வழங்கும் லென்ஸ் உள்ளிட்ட சத்திர சிகிச்சை பொருட்களை வைத்தியர்களுக்கு வழங்கி அவர்களே இந்த சத்திர சிகிச்சையை மேற்கொள்கின்றனர் என்றார்.

இந்த சத்திர சிகிச்சையை மேற்கொள்ள தேவையானவர்கள் இலங்கையில் உள்ள லயன்ஸ் கழகங்களுடன் தொடர்பு கொண்டால் அதனை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும். இவர்களின் இந்த சேவையை அறிந்து கொண்ட இலங்கையில் உள்ள இளம் பெண்கள் முஸ்லிம் அமைப்பின் மூலம் விடுக்கப்பட்ட வேண்டுகோலிற்கு அமைய சுமார் 50 பேருக்கான சத்திர சிகிச்சையை மேற்கொள் அமைப்பின் தலைவி தேசமாண்ய பவாஸ ா தாஹாவிற்கு லயன்ஸ் றிஸ்வி ரவுப் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமது சேவையை இலங்கையில் தொடர்ந்து செய்து இலங்கையில் உள்ள மக்களுக்கு இந்த பிரச்சினையை இல்லாமல் ஆக்குவதே தமது திட்டம் என்றார்.

# அறிவுச்சுடர் போட்டித்தொடரின் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சியும்!

(எஸ்.அஷ்ரப்கான்,
எம்.என்.எம்.அப்றாஸ்,
எம்.எம்.ஜபீர்)



ஏ. ஆர். மன்சூர் பவுண்டேஷ னின் அனுசரணையில் அறம் வலையமைப்பு நடாத்திய மாபெரும் "அறிவுச்சுடர்" போட்டித் தொடரின் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சியும் அந்நிறுவனத்தின் தலைவியும் அவுஸ்திரேலிய முஸ்லிம் கவுன்சிலின் தலைவியும் சட்டத்தரணிமான மர்யம் மன்சூர் நளிமுடீனுடைய தலைமையில் நேற்று (21) சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

மிகப்பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலையத்துக்கு உட்பட்ட எட்டு தேசிய பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட "அறிவுச்சுடர்"போட்டித்தொடரில் புள்ளிகள் அடிப்பைடயில் முன்னிலை வகித்த முதல் மூன்று பாடசாலைகளின் மாணவக்குழுக்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும்,பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்ட அதேவேளை சுற்றுத்தொடரில் பங்குகொண்ட பாடசாலைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அறிவுச்சுடர் சுற்றுத்தொடரில் புள்ளிகள் அடிப்படையில் முதலிடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியும் (தேசிய பாடசாலை) இரண்டாமிடத்தை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியும்(தேசிய பாடசாலை) மூன்றாமிடத்தை கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை (தேசிய பாடசாலை) மாணவர்களும் சுவீகரித்துக்கொண்டனர்.

நிகழ்வில் அதிதிகள் வரிசையில் அறம் வலையமைப்பின் ஸ்தாபகர் டொக்டர் சிஹாபுடீன் நளிமுடீன், கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், கல்முனை கல்வி வலய பணிமனையின் கணக்காளர் வை.ஹபீபுல்லா, பிரதிக் கல்வி பணிப்பாளர் ஜிஹானா ஆலிப், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் சபீனா இம்தியாஸ்,

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு, அல்-ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யு.எல்.நசார், மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் ஏ.ஆர். மன்சூர் பவுண்டேஷன் அமைப்பின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது சாய்ந்தமருது அல்- ஹிலால் வித்தியாலயத்துக்கு ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனினால் போட்டோ கொப்பி உபகரணம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

NEWS PLUS
WWW.NEWSPLUS.LK
2023 JANUARY 23 - MONDAY
Email: editor@newsplus.lk
FB: newsplustamil

## உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மார்ச் 09 இல் அடுத்து நடக்க வேண்டியது என்ன?

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுக்கலை தக்கல் செய்வதற்கான கடைசித் தினம் 2023.01.21 ஆம் திகதி சனிக்கிழமையுடன் முடிவடைந்தது. தேர்தலுக்கான நாள் 2023 மார்ச் மாதம் 09 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கை முழுவதிலும் உள்ள 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்காக இந்த தேர்தல் நடத்தப்பட வேண்டி இருக்கின்றது. இந்த 340 மன்றங்களில் 29 மா நகரசபைகளும் 36 நகர சபைகளும் உள்ளன. மார்ச் 20 ஆம் திகதியுடன் இந்த உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் முடிவடைவதால் இவ்வாறு தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்த நிலை இருக்கின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் 2023.01.19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் 61 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக 97 வாக்குகளும் எதிராக 36 வாக்குகளும் கிடைத்துள்ளன. ஆனாலும் வேட்புமனு தாக்கல் முடிவடைந்தவுடன் தேர்தலை பின்போடும் அறிவித்தலே வரும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் அரசாங்கம் எதிர் முரணான அறிவித்தலாக தேர்தல் நடைபெறுதி திகதியை நிச்சயித்து இருக்கின்றது. சமகி ஜனபலவேகய, பொதுஜன பெரமுண, ஸ்ரீ.ல.சு.கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி (ஜே.வி.பி), நிதஹஸ் ஜனதா சந்தானய, உத்தர லங்கா சபாவ (11 கட்சிகளின் கூட்டணி) வடக்கில் த.தே.கூ. அதே பொன்று கிழக்கில் ஏற்கனவே அரசிலில் ஈடபட்டு வரும் முஸ்லிம் சார்பு கட்சிகள் என்பவற்றோடு பொதுஜன பெரமுணவிற்கு சார்பான சுயேட்சைக் குழுக்கள், சுயாதீனமான சுயேட்சை குழுக்கள் என்று பல அணிகள் இந்த தேர்தலுக்காக களத்தில் இறங்கி உள்ளன.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் செலவினம் ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் எனினும் இந்த சட்டமூலத்தை நாடாளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கடந்த வாரம் முதல் பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய, ஜே.வி.பி. மற்றும் பொதுஜன பெரமுணவின் டளஸ் அணி ஆகியன கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வந்தன. தேர்தல் ஒன்றுக்கான கால வரையறை அறிவிக்கப்பட்டு வேட்புமனுக்களை ஏற்றுக்கொண்டு வருகின்ற நிலையில் அரசாங்கம் அவசர அவசரமாக இவ்வாறன ஒரு சட்டமூலத்தை நிறைவேற்ற துடிப்பது தேர்தலை பின்போடுவதற்கான ஒரு தந்திரோபாயமாகும் என்று கடுமையனா குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வந்தன. அதே நேரம் சட்டமூலம் நிறைவேற்றப்பட சற்று முன்னர் எதிர்க்கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தமும் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

அதே நேரம் உயர்நீதிமன்றத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவொன்றின் மீது 2023.01 18 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு சார்பாக ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிக்கயைில் தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டபடி உரிய காலத்திற்கு தேர்தலை நடத்தும். அதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார். நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கின்ற நிலையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தக்கூடாது என்று தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை எதிர்த்து தேர்தலை நடத்துமாறு ரீட் உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்ற மனுமீதான விசாரணை கடந்த 18 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற போதே சாலிய பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறோ இந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டமூலம் எதற்காக என்பதே பிரதான வினாவாகும். சட்டமூலத்தின் உள்ளடக்கத்தை பார்க்கும் போது பல விடயங்கள் புலனாகின்றது.

இந்த சட்டமூலம் தொடர்பாக நீதி அமைச்சர் தொவிக்கையில் இவ்வாறான ஒரு சட்டமூலம் 2015 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டு 20 ஆவது திருத்தத்தில் உட்படுத்த முயற்சி எடுக்கப்பட்டதாயினும் முடியாமல் போக இந்த சந்தர்ப்பத்தில் அதனை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக் கப்படுகின்றது.

இந்த சட்டமூலத்தில் என்ன இருக்கின்றது என்பது இந்த சந்தர்ப்பத்தில் கவனம் செலுத்தவேண்டிய விடயமாகும். தேர்தலில் அரசியல் கட்சிகள், சுயேட்சை குழுக்கல் எவ்வாறு எந்தளவு பணத்தை செலவு செய்ய வேண்டும் என்பது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு அரசியல் கட்சிகளை அழைத்து கலந்துரையாடி வரையறை விதிக்க முடியும். அவ்வாறே தேர்தலுக்காக அபேட்சகர்கள், அரசியல் கட்சிகள் அரச சார்பற்ற நிறுவனங்கள், வெளிநாடுகளில் இருந்து பணம் பெறுவது தடை செய்யப்படுகின்றது. அவ்வாறே தேர்தல் காலங்களில் அரச சொத்துக்களை தேர்தலுக்காக பயன்படுத்துவது, துஷ்பிரயோகம் செய்வது போன்ற விடயங்களும் தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

எவ்வாறாயினும் சட்டமூலத்தின் உள்ளடக்கம் சிறந்ததாக இருக்கின்றது. ஆனாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை அவதானிக்கயைில் இந்த நேரத்தில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதற்கான காரணம் நாடு பொருளாதார நெருக்கடியில் இருக்கின்ற நிலையில் தேர்தலுக்காக பணம் அரசாங்கத்தால் செலவிடுவது தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்காகும். ஆனாலும் அரசியல் கட்சிகள், சுயேட்சை குழுக்கள் பணம் செலவிடுவது அந்தந்த கட்சிகளதும் தனிப்பட்டவர்களதும் சொந்த பணத்தையாகும். இப்பாயடிான நிலையில் ஆளும் கட்சி தவிர்ந்த அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களைச் சோந்தவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளின் உதவிகளைக் கொண்டு பாரியளவு நிதியை பெற்று செலவு செய்தால் அதனால் ஆளும் கட்சி அபேட்சகர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என்ற அச்ச நிலையும் காரணமாக அமைகின்றது. அதே நேரம் ஏற்கனவே முன்னால் ஜனாதிபதியாக இருந்த கோதாபய ராஜபக்ஷவிற்கு எதிராக மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் (அரகலய) நடத்தி நாட்டை விட்டு ஓடச் செய்துள்ள நிலையில் மீண்டும் ஒரு அரச விரோத அல்லது எதிர்ப்பு நாடகம் அரங்கேரக் கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது என்பதை இந்த சட்டமூலம் காட்டுகின்றது.

ஏற்கனவே் நாட்டில் தோதல் நடைபெறுகின்ற காலப்பகுதிகளில் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள், சட்டங்கள் என்று பல வரையறைகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. ஆனாலும் அவை அரசியல் கட்சிகளாலும் தேர்தலில் போட்டியிடுகின்ற அபேட்சகர்களாலும் சரியான முறையில் கடைபிடிக்கப்படுகின்றதா என்பதுதான் பிரச்சினையாக இருந்து வருகின்றது. தேர்தல் வன்முறைகளை தடுப்பதற்கான சட்டம், பாரபட்சமற்ற முறையில் ஊடகங்களை பயன்படுத்துவது தொடர்பான சட்டங்கள், தேர்தல் ஒன்று அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஆளும் அதிகாரத்தில் இருப்பவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று பல சட்ட கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்தாலும் கடந்த காலங்களில் அவை உரிய முறையில் கடைபிடிக்கப்படவில்லை.

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள புதிய சட்டமூலத்தில் இடம்பெற்றிருக்கின்றபடி ஆளும் கட்சியில் இருக்கின்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களாலே அரச சொத்துக்கள் பயன்படுத்தல், துஷ்பிரயோகம் செய்தல் என்பன மேற்கொள் ளப்படுகின்றது. அதனால் சட்டம் கொண்டுவரப்பட்டால் மாத்திரம் போதுமானதாக இல்லை. அதனை மீறாமல் பாதுப்பதற்கான அதிகாரவர்க்கமும் பாரபட்சமற்ற முறையில் சட்டத்தை அமுல் செய்வதில் கவனம் செலுத்த வேண்டியது அவசிய மாகின்றது.

எதுவானாலும் தேர்தல் அறிவிகக்ப்பட்டுள்ள நிலையில் முழ நாடும் இப்போது தேர்தல் ஆர்வத்தில் இறங்கி இருக்கின்ற நிலையில் தேர்தலை நடத்து பணம் இல்லை, அதனை பின்போட வேண்டும் என்று ஆளும் கட்சி கூறி வந்த நிலையில் இப்போது போசாக்கு உணவு, நிவாரணம், 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட வறிய குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி பை நிவாரணம் என்று பல நிவாரண உதவிகளை அறிவிக்க தயாராகி வருகின்றது. தேர்தலை நடத்த பணம் இல்லாத நாட்டில் இந்த நிவாரண உதவிகளுக்காக பணம் எங்கிருந்து வருகின்றது. மக்களை இத்தகைய நிவாரண உதவிகளை வழங்கி தொடர்ந்து முன்னைய 69 இலட்சத்தை தயார்படுத்தினால் மீண்டும் முன்னைய நிலையை தொடரலாம் என்ற எண்ணப்பாடுகள் திரைமறைவில் இருக்கலாம். எதுவானாலும் எந்த நிவாரணம் வழங்கினாலும் அது மக்களது வரிப் பணம் என்பதையும் மக்கள் மறந்து விடக்கூடாது. ஆட்சியாளர்களது வீட்டில் இருந்து கொண்டுவந்த சொத்து அல்ல.

நாடு பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில் பலவிதமான கஷ்டங்களும் நெருக்கடிகளும் மக்களை வாட்டி வதைக்கின்ற சூழ்நிலையில் இந்த நாட்டை மீட்டெடுப்பதற்கான புதிய எழுச்சியை வெளிப்படுத்துவதற்கான ஜனநாயக வழியிலான நகர்வுக்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளை, சமிஞ்ஞையை இந்த தேர்தல் ஏற்படுத்தலாம். இவ்வாறான ஒரு நிலையில் மக்கள் வெறும் பகடைக் காய்களாக மாறாமல் நிதானமாக சிந்தித்து கருமமாற்ற தருணம் வந்திருக்கின்றது என்பதை மட்டும் சொல்லி வைக்கலாம்.

# முஸ்லிம் சமூகம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சமூக நீதிக்கான ஆணைக்குழுவுடன் கைகோர்க்குமாறு ஜனாதிபதி முஸ்லிம் சமூகத்திற்கு அழைப்பு !

75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு பலம் வாய்ந்த உண்மையான இலங்கையர்களாக ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அனைத்து சமூகங்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

எந்தவொரு சமயமும் நவீன உலகுடன் இணைந்து செல்ல வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி, எந்த சமயமும் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் சமயம் அல்ல எனவும் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று (19) நடைபெற்ற அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் 100வது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றுகையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம் ரிஸ்வியினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முத்திரையொன்று வெளியிடப்பட்டதுடன் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார அதனை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

நிகழ்ச்சி நிரலில் முந்திக் கொண்டமைக்காக முதலில் நான் மன்னிப்புக் கோருகின்றேன். நான் இறுதியாக பேசுவதாகவே இருந்தது. எனினும் இன்று புதிதாக இரண்டு அமைச்சர்கள் பதவியேற்க இருப்பதனால் ஜனாதிபதி என்ற வகையில் எனக்கு அவசரமாக செல்ல வேண்டியிருப்பதாக நான் ஏற்பாட்டாளர்களிடம் கூறினேன். முழுக்கூட்டமும் முடிவடைந்து நான் செல்லும் வரை அவர்கள் காத்திருக்க மாட்டார்கள்.

இந்த அமைப்பினுடைய தலைவரது முழுமையான பேச்சை நான் செவிமடுத்ததுடன் அதில் அவர் முன்வைத்த யோசனைகள் தொடர்பில் விசேடமாக கருத்துக்கூற விரும்புகின்றேன்.

உலமா சபை இன்று தனது 100வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. இது அவர்களது நூற்றாண்டு விழாவாகும். இச்சந்தர்ப்பத்தில் நாம் ஆரம்பத்தை நினைவுக்கூற வேண்டும். முதலாவது உலக யுத்தத்துக்குப் பின்னர் உலகம் மிகப் பெரிய மாற்றத்துக்கு முகம்கொடுத்து வந்த காலகட்டமே1922 ஆம் ஆண்டாகும். இக்காலப்பகுதியில் கலீபா ஆட்சி முறையை ஒழிக்கும் நடைமுறையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. கலீபா ஆட்சிமுறையை இல்லாதொழிப்பதற்கு இந்தியா மிகப் பெரிய இயக்கமொன்றைக் கொண்டிருந்தது. ஆனால் இலங்கையில் அதே காலப்பகுதியில் தான் முஸ்லிம்களின் எண்ணங்களதும் சிந்தாந்தத்தினதும் மையமாகச் செயற்படும் உலமா சபை எனும் அமைப்பை ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் அப்போதிருந்த சில பிரச்சினைகளுக்கு நாம் இன்றும் முகம்கொடுக்க நேரிட்டுள்ளது.

நாம் இப்போது வித்தியாசமானதொரு உலகத்தில் வசிக்கின்றோம். 1922 ஆம் ஆண்டில் 150 நாடுகளும் அப்போது இருக்கவில்லை. நாம் புதிய நூற்றாண்டில் வசிக்கின்றோம். விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி, அரசியல் உரிமைகளின் முன்னேற்றம் என்ற இந்தப் பின்னணியில் நாம் இலங்கை முஸ்லிம்களின் எதிர்காலத்தைப் பார்க்க வேண்டும்.

இஸ்லாம் மட்டுமன்றி அனைத்து சமயங்களுமே தமது சமயத்தின் அடிப்படைகளையே பார்க்கின்றன. சமயம் கூறும் தூய்மையான அர்த்தங்கள் எவை? அவற்றை எவ்வாறு நவீன உலகத்துடன் இணைப்பது? சமயத்தின் அடிப்படையை நீங்கள் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திற்கு பயன்படுத்த வேண்டும். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் பௌத்தம். புத்த பெருமான் கங்கைக் கரைகளில் இருந்து பௌத்த மதத்தைப் போதிக்கும்போது கரையோர நகரிகமே இருந்தது. எனினும் அது இலங்கைக்கு கொண்டுவரப்பட்டபோது பௌத்த சமயத்தில் ஓரளவு அடிப்படையைக் கொண்டிருந்த கரையோர நாகரீகத்தை கட்டியெழுப்ப எம்மால் முடிந்தது. அது கௌதம புத்தருடைய காலத்தில் இல்லை என்பதற்காக நாம் இந்த நாகரீகத்தை நிராகரிக்கவில்லை. எனினும் எம்மால் அந்த நாகரீகத்தை ஏற்றுக்கொள்ள முடிந்தது.

அதுபோன்றே, நாம் அனைவரும் நிகழ்காலத்தில் வாழ்ந்து கொண்டே எதிர்காலத்தைப் பார்க்க வேண்டும். எமது சமயத்தின் அடிப்படையைப் பார்ப்பதற்கு கடந்த காலம் எமக்கு உதவியாக அமையும். எந்தவொரு சமயமும் வெறுப்புச் சமயம் அல்ல. அது வெறுப்புச் சமயமாக இருக்கவும் முடியாது. அது நிச்சயமாக இரக்கமானதாகவே இருக்க வேண்டும்.

மோசஸ/க்கு அங்கீகாரம் வழங்கிய, கிறிஸ்துவுக்கு அங்கீகாரம் வழங்கிய, நபிகள் நாயகத்துக்கு அங்கீகாரம் வழங்கிய சமயம் வெறுப்புச் சமயம் என்ற அர்த்தத்தைக் கொள்ளாது. இது அன்பை அடிப்படையாகக் கொண்டதொரு சமயமாகும். இஸ்லாமும் முஹம்மது நபியும் அதனையே தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றனர்.

எனவே நாம் எந்தவொரு சமயத்தையும் வெறுப்புச் சமயமாக மாற்றக் கூடாது. எனினும் அதன் அடிப்படையைப் பாருங்கள். நாம் எவ்வாறு ஒன்றாக வாழ்வது? நாம் எவ்வாறு பிற சமையத்தையும் பிறரையும் பார்ப்பது?

ஒவ்வொரு சமயமும் தனது சமயத்தைப் பற்றி அனைவருக்கும் போதிக்க வேண்டும். ஆஸ்திகனுக்கும் நாஸ்திகனுக்கும். நாஸ்திகனுக்குப் போதிப்பதால் அவர்கள் எந்தவொரு சமயத்தினதும் எதிரிகள் ஆகிவிட மாட்டார்கள்.

சமயங்களும் பாரிய பிணக்குகளுக்கு முகம் கொடுத்துச் செல்கின்றன. இஸ்லாத்தில் மட்டுமல்ல. எதிர்காலம் என்றால் என்ன என்பது தொடர்பில் இஸ்லாத்திலும் பாரிய விவாதங்களும் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன.

ஏனைய சமயங்களிலும் இந்நிலைமை காணப்படுகிறது. நீங்கள் கத்தோலிக்க தேவாலயங்களை எடுத்துப் பார்த்தால் அங்கே அருட் தந்தையின் போதனைகள் கத்தோலிக்க தேவாலயத்திலுள்ள பழமைவாத உறுப்பினர்களால் பெரிதும் சவாலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இங்கிலாந்திலுள்ள தேவாலயங்களில் தற்போது ஆண் ஓரினச்சேர்க்கை திருமணங்களை அங்கீகரிப்பதா அதனை எவ்வாறு நடத்துவது போன்ற விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

அனைத்து சமயங்களிலும் பிரச்சினைகள் உள்ளன. அது இந்து சமயமாக இருந்தாலும் சரி பௌத்த சமயமாக இருந்தாலும் சரி.அவை என்ன என்பது பற்றியே நாம் கலந்துரையாடி வருகின்றோம். எனவே நாம் அனைவரும் அதற்கு முகம் கொடுத்துள்ளோம். எனினும் நாம் எமது அடிப்படை கொள்கையிலிருந்து விலகக்கூடாது. எனவே அது வெறுப்புக்குறிய சமயம் ஆகாது. அது அன்பு செலுத்த வேண்டிய சமயம் ஆகும்.

சமயத்தின் ஆகக்கூடிய நோக்கம் எங்கே முடிவடையும் என்பதை எவ்வாறு கண்டறிவது? எனவே, இஸ்லாம், பௌத்தம், இந்து மற்றும் கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த நம் அனைவரும் எமது சமயத்தின் அடிப்படைகளை தேடும் கொள்கைகளில் குறியாக இருக்க வேண்டும். சமயம் வர்த்தகமயப்படுத்தப்பட்டிருப்பதாக நாம் உணருகின்றோம். ஆம்! யுத்தத்தங்கள் உருவாகவும் சமயம் காரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவதாக சமயம் தனக்குத்தானே ஏற்றுக் கொள்வதுடன் நவீனத்துக்கு வழிகாட்ட வேண்டும். இஸ்லாமானது நபிகள் பிறந்த அரேபியாவுக்கே மீண்டும் செல்ல வேண்டும் என கூறுபவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்? இஸ்லாமிய நாகரீகத்தின் பொற்காலம் பக்தாதை தலைநகரமாகக் கொண்டிருந்தது. அது வானியல், மருத்துவம் என எம்மீது ஏற்படுத்தியுள்ள செல்வாக்கைப் பாருங்கள். ஸ்பெயினில் உள்ள ஐபீரியன் குடாநாட்டிலுள்ள முஸ்லிம் இராச்சியங்களைப் பாருங்கள். அவையே இன்று ஐரோப்பாவாக வளர்ச்சியடைந்துள்ளன. நாம் அவற்றைப் பற்றி பேசுகின்றோம். உஸ்மானிய சாம்ராச்சியத்தைச் சேர்ந்த சுலைமான் நபியைப் பாருங்கள்.

எமது பிராந்தியத்தில் கூட அக்பார் பேரரசர் பிராந்தியங்களை ஒன்றிணைக்க முயற்சி செய்தார். அவர், இரண்டு சமுத்திரங்களின் சங்கமம் பற்றி பேசிய தனது பேரனின் கருத்தியலைப் பின்தொடர்ந்தார். அதனையே நாம் இப்போது இந்து-பசுபிக் என்றழைக்கின்றோம்.எனினும் அவர் அதைப்பற்றிக் கூறவில்லை. இளவரசர் கூறிய இரண்டு சமுத்திரங்களின் சங்கமம் என்பது அக்காலப்பகுதிக்குரிய இந்து மற்றும் இஸ்லாம் சமயங்களின் சங்கமத்தையே குறிக்கின்றது. எனினும் நாளடைவில் அவர் கூறியது புவிசார் அரசியல் அடிப்படையில் மாற்றப்பட்டதுடன் அதுவே மோதலுக்கும் காரணமாக அமைந்தது. அதுவே சாராம்சம் என்பதாகும். நீங்கள் நவீனத்தை ஏற்றுக்கொண்டு முன்னேறிச் செல்லப்போகின்றீர்களா? சமயங்கள் அதனை செய்ய வேண்டும். அதில் மாற்றம் செய்வதற்கு எதுவும் இல்லை. சமயத்தில் கூறப்பட்டுள்ளதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இஸ்லாம் அரேபியாவில் ஆரம்பமானாலும் பெரும் எண்ணிக்கையானவர்கள் தெற்காசியா மற்றும் தென்கிழக்காசியாவிலேயே உள்ளனர்.இந்தோனேசியா, பாகிஸ்தான், இந்தியா மற்றும் பங்களாதேஷ் மட்டுமன்றி சஹாராவின் தெற்குப் பகுதியிலும் பெரும் எண்ணிக்கையானவர்கள் இருக்கின்றனர். அடுத்ததாக கிழக்கே அமெரிக்காவிலும் அதிகமானவர்கள் இருக்கின்றனர். எனினும் தற்போது அவர்களிடையே வேறுபாடுகள் மட்டும் மோதல்கள் இடம்பெற்று வருவதை என்னால் அவதானிக்க முடிகின்றது.

இந்திய உபகண்டத்தில் வாழும் இந்துக்கள், பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் தற்போது மேலைத்தேய நாகரீகத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் பிரித்தானிய பிரதமராக இந்து சமயத்தைச் சேர்ந்த ஒருவரும் மேயராக முஸ்லிம் ஒருவருமே உள்ளனர். அவர்கள் மேற்கத்தேய கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்றனரே தவிர இந்து மற்றும் இஸ்லாத்தை வளர்த்தெடுத்த கலாசாரத்தை பிரதிபலிக்கவில்லை.அது போன்ற விடயங்களையே நாம் இன்று கையாள்வதுடன் நவீனம் என்றால் என்ன? நவீன நிலை என்பது என்ன? நாம் எங்கே செல்கின்றோம் என்பவற்றை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

எனவே நவீனமயமாதல் என்பது முக்கியம். இலங்கையில் முஸ்லிங்களுக்கிடையே நவீன சிந்தனையை ஏற்படுத்தும் நிலையங்களை உருவாக்க வேண்டுமென்றே நான் கூறுவேன். அதற்கு மிகச் சிறந்த இடம் தென்கிழக்கே ஸ்தாபிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஆகும். இன்று திருமதி அஸ்ரப்ஆவரது சாதனைக்காக கௌரவிக்கப்பட்டார். பெண் என்ற வகையில் அது அவருக்கு உரித்தானதாகும். இச்சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்தமைக்காக மறைந்த முன்னாள் அமைச்சர் அஷ்ரப் அவர்களையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இது நவீன சிந்தனைகளைக் கொண்ட நவீன பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும். அப்போது அரசாங்கத்தின் ஆதரவும் அதற்கு கிடைக்கும். எனினும் இதனை நீங்கள் முஸ்லிம்களுக்கு மட்டும் மட்டுப்படுத்த நினைத்தால் பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்திற்கூடாகவும் நீங்கள் இதே விளைவை சந்திக்க நேரிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே நவீனம் எனும் சாரம்சத்தையே நாம் ஏற்றுக் கொண்டு முன்நோக்கிச் செல்ல வேண்டும். இங்கே கூட முஸ்லிம்கள் மாற்றங்களுக்கு முகம் கொடுத்திருப்பதையும் அது பற்றி கலந்துரையாடுவதையும் என்னால் பார்க்க முடிந்த்து.

அந்த வகையில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் பிரதான விடயமாக உள்ளது. அது மிகவும் நாகரீகமான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அது முஸ்லிம் சமூகத்தினருடன் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் நான் அதில் தலையிட விரும்பவில்லை. எனினும் முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு விடயத்தையும் முன்னெடுக்காதீர்கள் என நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்றொருநாள் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்துக்கு எதிராக சிறுவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதைக் கண்டேன்.அது முறையானதல்ல. அது சிறுவர் பராமரிப்பை மீறும் வன்முறையாகும். வளர்ந்தவர்கள் அதனைச் செய்வது வேறு விடயம். ஆனால் கண்டிப்பாக சிறுவர்கள் அல்லர். அது முஸ்லிம்கள் பற்றிய மறைமுகமான மதிப்பீட்டைக் கொடுக்கும். எனவே அவர்களை அனுமதிக்காதீர்கள். அது மட்டுமே எனக்கு கூறவேண்டியுள்ளது.

தற்போது நீங்கள் உங்கள் 100வது ஆண்டை பூர்த்தி செய்துள்ளீர்கள். நாமும் 75வது ஆண்டை பூர்த்திசெய்யவுள்ளோம். எமது அதிகப்படியான நேரம் ஒருவருடன் ஒருவர் சண்டையிடுவதிலேயே கழிந்துள்ளது. எனினும் தற்போது இது நல்லிணக்கத்துக்கான நேரமாகும்.

எனவே தான் நாம் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்துள்ளோம். அதாவது இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் எவ்வாறு நல்லிணக்கத்துக்குப் பங்களிக்கப் போகின்றார்கள் என்பது பற்றி நாம் ஆராய்ந்தோம். முதற்படி முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாம் மீண்டும் கட்சித் தலைவர்களையும் சந்திக்கவுள்ளோம். இந்தக் கலந்துரையாடல் மூலமாக நாம் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

மனோ கணேசன் என்னை ஏன் உற்றுப் பார்க்கின்றார் என்று எனக்குத் தெரியவில்லை. மலையகத் தமிழர்களை சமூகத்துடன் ஒன்றிணைப்பது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்துவோம். அவர்கள் தாமதித்து வந்தாலும் அவர்களையும் சமூகத்துடன் நாம் ஒன்றிணைக்க வேண்டும்.

எமது சமூகத்தில் காலம் தாமதித்து பல இனங்களும் சமயங்களும் ஒன்றிணைக்கப்பட்டாலும் அவர்கள் அதற்குரிய பலனை அனுபவிக்கவில்லை. எனவே அவர்களும் முழுமையாக ஒன்றிணைக்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக முஸ்லிம் இனத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் எனக்கு கலந்துரையாட வேண்டும். 2018 ஆம் ஆண்டின் திகன கலவரம் , 2019 ஆம் ஆண்டின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பன தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்படுவதுடன் அதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் தொடர்பிலும் நாம் பேச வேண்டும். கொழும்பு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினையிலும் முற்றிலும் வேறுபட்ட பிரச்சினைகளையே இலங்கையின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள முஸ்லிம்களும் மன்னார் முஸ்லிம்களும் எதிர்நோக்குகின்றனர்.

இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் , சிங்களவர்கள் போன்று இவர்களிடமும் பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் எதிர்கொண்டுள்ள துன்பங்கள், சமூக பின்னடைவுகள் உள்ளிட்ட விடயங்களை வெளிக்கொணர வேண்டும். இது நல்லிணக்கம் தொடர்பான மூன்றாம் கட்ட நடவடிக்கையாக அமையும்.

அதேபோன்று சிங்களவர்களுடனும் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். அதிலும் பல குழுக்கள் உள்ளன. சிலர் சாதி அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளனர். மேலும் பலரை சமூகம் ஏற்றுக்கொள்வதில்லை. இதுபோன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே எனக்கு சமூக நீதி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க வேண்டிய தேவையுள்ளது. எனவே, ஏனைய முஸ்லிம் குழுக்களுடனும் கலந்துரையாடி அவர்களுக்குள்ள பிரச்சினைகளை எமது மூன்றாம் கட்ட சந்திப்பின்போது எமக்கு அறியத்தருமாறு நான் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையைக் கேட்டுக் கொள்கின்றேன்.

ஒவ்வொருவருக்கும் தனித்தனி பிரச்சினை இருப்பதன் காரணமாகவே அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் நோக்கில் நாம் அனைவரையும் ஒன்றாக இணைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. எனவே பிரச்சினைகளை கட்டம் கட்டமாக தீர்ப்போம். அப்போது 75வது ஆண்டு சுதந்திர தின நிகழ்வின்போது நாம் அனைவரும் ஒரு தாய் மக்களாக வாழும் நிலை ஏற்படும்.

அடுத்த 25 வருடங்களில் வரலாற்றுக்கான நிறுவனமொன்றை ஸ்தாபிப்போம். அவர்கள் கடந்த காலத்தைப் பற்றிஆராய்வார்கள். எனவே நாம் பொது இடங்களில் இருந்து கொண்டு பழையதைப் பற்றி கூச்சலிடத் தேவையில்லை. மேலும் புதிய பொருளாதாரத்தை ஸ்தாபிப்பதற்காக அரச மற்றும் பொதுக் கொள்கைகளுக்கான ஏனைய நிறுவனங்களும் உருவாக்கப்படும். ஒரு தேசமாக நாம் உறுதியாக இருப்போம்.சமூக நீதி நிலவட்டும் . இனங்களுக்கிடையேயான ஒற்றுமை நிலவட்டும். எமக்குள் சௌபாக்கியத்தை ஏற்படுத்தும் புதிய பொருளாதாரத்தை நாம் கொண்டிருப்போம். என்னை இந்த நிகழ்விற்கு அழைத்தமைக்கு நன்றி - என்றார்.



# நானுஓயா ரதல்லையின் கோர விபத்து!

## 7 உயிர்கள் பரிதாபப் பலி



செ.திவாகரன் நானுஓயா

நானுஓயாவில் இடம்பெற்ற கோர வாகன விபத்தில் 3 சிறார்கள் உட்பட ஏழு பேர் பரிதாபகரமாக பலியாகியுள்ளனர்.

53 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் சிலருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது

குறித்த விபத்தில் வேனில் பயணித்த அறுவரும், ஆட்டோ சாரதியும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்

வேனில் பயணித்த தாய், தந்தை, இரு பிள்ளைகள், உறவினர் ஒருவர் மற்றும் சாரதி ஆகியோர் ஹட்டன், டிக்கோயா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், ஆட்டோ சாரதி நானுஓயா பகுதியைச் சேர்ந்தவர் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் விபரமும் வயதும்.

அப்துல் ரஹீம் (55), ஆயிஷா பாத்திமா (45), மரியம் (13), நபீஹா (08), ரஹீம் (14), நேசராஜ் பிள்ளை (25) (வேன் சாரதி), சன்முகராஜ் (25) (முச்சக்கரவண்டி சாரதி)

இந்த பேருந்து நானுஓயா குறுக்கு வீதியில் சமர் செட் பகுதியில் கோவில் ஒன்றுக்கு அருகில் உள்ள வளைவு ஒன்றில் நுவரெலியாவில் இருந்து கொழும்பை நோக்கி பயணித்த பேருந்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவே சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ,

தடையாளி உரிய வகையில் இயங்காமையால் டிக்கோயா பகுதியில் இருந்து நுவரெலியா நோக்கி சென்ற வேன் ஒன்றுடன் மோதியதுடன், அதற்கு பின்னால் வந்த நானுஓயாவை நோக்கி சென்ற முச்சக்கர வண்டி ஒன்றுடனும் மோதி பேருந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்திற்கு உள்ளாகியுள்ளது.

இந்த பேருந்தில் பயணித்த கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியை சேர்ந்த 53 மாணவர்கள் சென்ற பேருந்து ஒன்றே இவ்வாறு பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது இவர்களில் காயங்களிற்கு உள்ளானவர்களை நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கி வருவதாக நுவரெலியா வைத்தியசாலையின் பணிப்பாளர் மகேந்திர சேனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பஸ் சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்திருப்பதாகவும், அங்கு இருள் காரணமாக மீட்பு நடவடிக்கைகள் சிறிது நேரம் தாமதமாகவே மேற்கொள்ளப்பட்டது.

நானுஓயா பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கும் நடவடிக்கை துரிதமாக இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது .

இந்நிலையில், விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 43 வயதுடைய ஒருவர் சனிக்கிழமை பிற்பகல் வீடு திரும்பியுள்ளதாகவும் ,மேலும் 6 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், 4 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் , இந்த விபத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருந்த மற்றுமொரு பாடசாலை மாணவி தற்போது நுவரெலியா பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மகேந்திர சேனாநாயக்க தெரிவித்தார் .

இந்த பேருந்து விபத்தின் பின்னர், நானுஓயா, ரதெல்ல குறுகிய வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்காக தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

**விபத்துக்கான காரணம்:**

குறித்த பேருந்து விபத்துக்குள்ளான போது பேருந்தில் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் 11ஆம் ஆண்டு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என 42 பேர் உட்பட 53 பேர் பயணித்துள்ளனர்.

பேருந்தில் இருந்த மாணவர்களும், வான் மற்றும் முச்சக்கர வண்டியில் பயணித்தவர்களும் பாதுகாப்புப் படையினர் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவா,

“இந்தப் பேருந்தின் சாரதி ஹொரண பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடையவர். விபத்துக்கான சரியான காரணம் இதுவரை அறிய முடியவில்லை.பேருந்தின் சாரதியும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.


பேருந்தில் சில அலட்சியங்கள் உள்ளது.ஆனால் உறுதியாக எதனையும் கூறமுடியாது. தொழில்நுட்ப கோளாறா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உண்டா என்பது தொடர்பில் விசாரணை அதிகாரிகள் தெளிவான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ் வீதியில் கனரக வாகனங்கள் செல்வது தடை செய்து முற்றுப்புள்ளி வைக்கப்படுமா ?

பலமுறை எவ்விதியில் கனரக வாகனங்களை பயணம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் ஓரிரு நாட்களுக்கு மாத்திரம் நடைமுறையில் இருக்கின்றது . நாட்டில் தினசரி இடம்பெறும் விபத்துக்களில் அதிகமானவை வாகன விபத்துக்களாகவே உள்ளன. போக்குவரத்துப் பொலிஸார் நாடளாவிய ரீதியில் கடமையில் இருந்து இவற்றை கண்காணித்து வருகின்ற போதிலும், சாரதிகளில் அதிகமானவர்கள் வீதி ஒழுங்குகளை குறித்து அதிகம் கவனத்தில் கொள்வதில்லை.

ஆனாலும் ஒரு பொலிஸாரை கண்டால் மாத்திரமே ஏதோ மரியாதைக்காக வீதி ஒழுங்கினை பேணுகின்றவர் போன்று காண்பிக்கின்றனர். வீதி ஒழுங்குகளை சரியாக அனுசரித்து நடந்தால் பொலிஸாரைப் பார்த்து அஞ்சத்தேவையில்லை. சாரதிகள் ஒத்துழைத்தால் வீதி விபத்துக்களை முழுமையாக தடுத்து நிறுத்தலாம். குறிப்பாக சாரதிகளும் , பொதுமக்களும் வீதி ஒழுங்குகளை உதாசீனப்படுத்துவதினாலேயே அதிகளவிலான வீதி விபத்துக்கள் நடைபெறுகின்றது தண்டபணம் அதிகரிக்கப்பட்ட பின்பே, அநாவசியமாக பெரும் தொகை பணத்தை தண்டமாக செலுத்த வேண்டுமா என்ற மனப்பான்மையில் பெரும்பாலான சாரதிகள் வீதி ஒழுங்கினை சீராக கடைப்பிடிக்கின்றனர். வீதி விபத்துக்களை குறைப்பதற்கு தண்டப் பணமோ, பொலிஸாரோ வேண்டியதில்லை. சகல சாரதிகளும் வீதி ஒழுங்கினை சீராக கடைப்பிடித்து வாகனத்தை செலுத்தினால் பெறுமதிமிக்க உயிர்களை பாதுகாத்துக் கொள்ளலாம் வீதியில் நடமாடும் போதும் உங்கள் உயிர் உங்கள் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்

எனவே குறித்த அதிகாரிகள் வீதியில் ஏற்பட்டுள்ள விபத்துக்களை கருத்தில் கொண்டு கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தொடர்ச்சியாக தடை விதிக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றன. அத்துமீறி கனரக வாகனங்கள் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் பயணம் செய்தால் பிரதேச மக்கள் ஒன்றிணைந்தேன் வீதிக்கு இறங்குவோம் என தெரிவிக்கின்றன.













# நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் இ.போ.ச பேருந்துக்கள் திடீரென்று நிறுத்தம்

## - பாடசாலை மாணவர்கள் அவதி -




(டி.சந்ரு)

நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் இருந்து நாவலர் தமிழ் மகா வித்தியாலயம், பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரி, காமினி தேசிய பாடசாலை, நல்லாயன் மகளீர் கல்லூரி போன்ற அரச மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள் காலை வேளையில் உரிய நேரத்திற்கு பேருந்து சேவையில் ஈடுபடாமையினால் பாடசாலை மாணவர்களும் தொழில் துறைக்குச் செல்வோரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதியில் தினமும் சேவையில் இருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான மூன்றுக்கும் மேற்பட்ட பேருந்துக்கள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளமையால் பயணிக்கும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், அன்றாட தொழிலுக்குச் செல்வோர் சீரான பஸ் போக்குவரத்து இல்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்

குறிப்பாக கிலாரண்டன், டெஸ்போட், கிரிமிட்டி, வாழைமலை. அவோக்கா,கார்லிபேக் போன்ற பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை மாணவர்களும் , பொதுமக்களுமே இவ்வாறு தொடர்ந்து அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாக கவலை தெரிவிக்கின்றன .

இப்படி இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான மூன்றுக்கும் மேற்பட்ட பேருந்துக்கள் திடீரென நிறுத்தப்பட்டுள்ளமையால் காலை 6:30 தலவாக்கலையில் இருந்து நுவரெலியா நோக்கி புரப்பட்டு டெஸ்போட், கிரிமிட்டி வழியாக காலை 7:20 மணியளவில் செல்லும் பேருந்து சனம் நிரம்பி வருவதாகவும், அதில் ஏறி பயணம் செய்ய இயலாத நிலை ஏற்படுவதாகவும், இதிலும் இ.போ.ச பேருந்திற்கான மாதாந்த பருவ சீட்டு பெற்றுக்கொண்டவர்கள் முச்சக்கரவண்டிகளிலேயே, வேறு வாகனங்களிலேயே செல்ல வேண்டியிருக்கிறது. இதில் கிலாரண்டன் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் நானுஓயா பிரதான நகருக்கும் , நானுஓயா நாவலர் பாடசாலைக்கு மூன்று ,நான்கு கிலோமீற்றர் தூரம் நடந்தே செல்கின்றனர் இதனால் உரிய நேரத்தில் பாடசாலைக்கோ, அலுவலகங்களுக்கோ செல்லமுடியாமல் மீண்டும் தமது வீடுகளுக்கே செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் ,

இவ்வீதியில் காலை நேரங்களில் குறிப்பிட்ட நேரங்களில் அரச பேருந்துகள் சேவையில் ஈடுபடாமையால் இப்பிரதேச மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்

எனவே இப்பிரதேச மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்திற் கொண்டு பாடசாலை நேரங்களில் சீரான பேருந்து சேவையை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வரவேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அம்பாறை மாவட்ட இளைஞர் மன்ற பெருவிழா!









அம்பாறை மாவட்டத்தில் “வன்முறைத் தீவிரவாதத்தைத் தடுத்தல் மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தல்” எனும் தொனிப்பொருளில் GAFSO நிறுவனத்தால் மாவட்ட அளவிலான இளைஞர் மன்ற அறிமுக பெருவிழாவானது 2023.01.19 வியாழக்கிழமை அன்று சம்மாந்துறை அல்-மஜீட் நகர மண்டபத்தில் மிகவிமர்சையாக இடம்பெற்றது.

GCERF, HELVETAS நிறுவனங்களின் நிதியுதவியுடன் GAFSO நிறுவனத்தின் அமுல்படுத்தலின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் செயற்படுத்தி வரும் HOPE OF YOUTH (இளைஞர்களின் நம்பிக்கை) எனும் வேலைத்திட்டத்தின் ஊடாக சுமார் 8 பிரதேச செயலக இளைஞர்களை ஒன்றினைத்து மாவட்ட அளவிளான மன்றம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

இந்நிகழ்வானது புயுகுளுமு நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட் அவர்களின் தலைமையில் இடம்பெற்றதுடன், அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எ.ஜகதீஸன், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜயலத், தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் / உதவி பிரதேச செயலாளர்கள் அதேபோல இளைஞர் சேவை அதிகாரிகள், சமூக சேவைஉத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் மன்றங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் இளைஞர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் HOPE OF YOUTH வேலைத்திட்டத்தின் பங்குபற்றுனர்களினால் கலை கலாச்சார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் வன்முறையற்ற இளைஞர் சமூகத்திற்க்காக இளைஞர் உறுதிமொழி எடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான ஒருநாள் தலைமைத்துவ பயிற்சி பாசறை கல்லூரி அதிபர் ஏ. எல். ஏ.ரஹ்மான் அவர்களின் வழிகாட்டுதலில்,ஒழுக்காற்று உப அதிபர் யூ.மஃபூப் உடையார் அவர்களின் தலைமையில் எம். ரியாஸ் ஆசிரியரின் ஒத்துழைப்போடு கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் உளவள ஆலோசகர் எம். டி.எம்.ஹாசிம் அவர்கள் இவ் நிகழ்வில்,மாணவத் தலைவர்களுக்கான பொறுப்புகளும் கடமைகளும்,தலைமைத்துவ போக்கும் சவால்களும்,தலைமைத்துவம்,நேர முகாமைத்துவம்,போன்ற பயிற்சி செயல்முறைகளையும்,வழங்கி சிறப்பாக வழி நடத்தியமையை இங்கு காணலாம். (அரநாயக்க விஷேட நிருபர் )

# பேருவளை மருதானை தாருஸ் ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா






(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை மருதானை தாருஸ் ஸஹ்ரா மகளிர் அரபுக் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா சீனன்கோட்டை அல் - ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம்.ஜாபீர் ஹாஜியார் மண்டபத்தில் (16) சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரி ஸ்தாபக உறுப்பினர் மௌலவி பஸ்லான் ஜஸுலி (அல்-அஷ்ரபி பீ.ஏ.) கலாபீட தலைமை நிர்வாகி சங்கைக்குறிய மௌலவி ஸக்கி அஹமத் ஆலிம் (அல்-அஷ்ரபி-எம்.ஏ.) ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் 26 பேர் ஆலிமாக்களாக பட்டம் பெற்று வெளியேறினர்.

மாத்தறை மின்னதுல் பாஸிய் அரபுக் கல்லூரி முதல்வர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம்.இஸ்திகார் (பாரி) பட்டமளிப்பு பேடுரை நிகழ்த்தினார்.

பட்டம் பெற்ற மாணவி அல் ஆலிமா ரைஸா ரியாஸ்தீன் (ஸஹ்ரவிய்யா) வரவேற்புரை நிகழ்த்தியதோடு பட்டம் பெற்ற மற்றொரு ஆலிமாவான ஸஹ்ரா மன்ஸூர் (ஸஹ்ரவிய்யா) மத்ரஸா வரலாற்றை எடுத்துரைத்தார்.

மேலும் பட்டம் பெற்ற ஆலிமாக்களான நப்லா நவாஸ் (ஸஹ்ரவிய்யா) இம்மை மருமையின் விளைநிலம் எனும் தலைப்பிலும் பாத்திமா பாரூக் (ஸஹ்ரவிய்யா) ஸலிஹான பெண் என்ற தலைப்பிலும் உரையாற்றியதோடு ஸபிய்யா இஸ்மாயில் (ஸஹ்ரவிய்யா) நற்சிந்தனை வழங்கினார்.அதிபர் /ஹமைஸரா ஹஸன் (பீ.ஏ.) உட்பட பலரும் நிகழ்வில் பேசினார்.

அத்தோடு இஸ்லாமிய கீதம்,கவிதை, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பொற்றமை குறிப்பிடத்தக்கது.

கெச்சிமலை அல்-அஷ்ரபியா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி ஏ.ஆர்.எம்.ஸில்மி (நூரி-அல் அஸ்ஹரி-எம்.ஏ.) துஆ பிரார்த்தனை புரிந்தார்.

சீனன்கோட்டை பாஸிய்யா பள்ளிவாசல் பிரதம இமாம் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம்.ரபீக் (பஹ்ஜி) வெலிகாமம் ரிபாயிய்யா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எஸ். எம்.அப்துல்லாஹ் (ரவ்லி) உப அதிபர் மௌலவி எம்.அஸ்மிகான் (முஅய்யிதி) அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை நிறை வேற்றுக் குழு உறுப்பினர் அஷ் செய்க் இஹ்ஸானுதீன் அபுல் ஹஸன் (நளீமி) முஸ்லிம் விவாகல் பதிவாளர் மௌலவி எம்.எஸ்.எம்.பாஸில் (அஷ்ரபி) மற்றும் மௌலவிகளான எம்.பாரூக் (மக்கி) ஏ.டப்ளியு.எம்.பஹ்ருதீன் (மிஸ்பாஹி) பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மத்,சீனன்கோட்டை பள்ளிச் சங்க உப தலைவர் சட்டத்தரணி எம்.ஸி.எம்.ஹம்ஸா உட்பட உலமாக்கள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




அன்மையில் இலங்கை வருகை தந்திருந்த மலேசியா நாட்டின் மலாக்கா ஆளுனர் அல் பின் மொஹமட் ருஸ்டம் கொழும்பில் உள்ள மலே விளையாட்டு கழக உறுப்பினர்களையும் ஹம்பாந்தோட்டை கும்புலான் மலாயு கிறிக்கட் கழகத்தின் வீரர்களையும் ஹோட்டேல் ஜெயிக்கா ஹில்டனில் வைத்துச் சந்தித்தார். அச்சமயத்தில் மலாக்கா மாநிலத்தில் இலங்கை மலாய வீரர்களை மாலக்கா மாநிலத்தில் விளையாடுவதற்கு சர்ந்தப்மொன்றினை வழங்கியுள்ளர். மலாக்கா வீரர்களுடன் விளையாட்டு போட்டி பயிற்சிகளை தான் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார். அத்துடன் எதிர்வரும் அடுத்த ஒர் இரு மாதங்களில் மலே விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர்கள் மலேசியா செல்வதற்கான வாய்ப்பினை வழங்குவதாக தெரிவித்தார். அதற்கான ஏற்பாடுகளை செய்வதாகவும் உறுதியளித்தார். இத் விளையாட்டுத் திட்டத்திற்கான திட்டத்தினை இக் கழககத்தின் தலைவர் ஜனாபா ரோசி மார்சோ, கழகத்தின் தலைவர் இஸ்சத் அலி, செயலாளர் சுல்பிகார் அலி மற்றும் சர்வதேச மலாய இலங்கைக்கான தலைவர் துவான் அன்வரும் கலந்து கொண்டனர்.

(அஷ்ரப் ஏ சமத்)



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

## மனநலமும் ஆலோசனையும்

# எங்களை மேம்படுத்துவதன் ஒரே ரகசியம்



ஆம்..! எங்களை மேம்படுத்துவதற்கான இரகசியம் தான் என்ன?

அது ஒன்றும் பெரிய இரகசியம் அல்ல.

பேசுவதை விட எங்களின் இலக்கை அடைவதற்காக வேலை செய்வதுதான் அந்த ரகசியம்.

ஒவ்வொரு வெற்றிகரமான நபரும் ஏற்றுக்கொண்ட ரகசியம் இது.

படித்தவர், படிக்காதவர், படைப்பாற்றல் உள்ளவர், படைப்பாற்றல் இல்லாதவர் எவராக இருந்தாலும், இந்த ரகசியம் பலருக்குப் பலனாகவே இருந்து வருகிறது.

“குறைவாக பேசுஅதிகமாக வேலை செய்” என்று சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

இதன் முதல் படி, எங்கள் நேரம் மதிப்புமிக்கது என்பதைப் புரிந்துகொள்வது...

இரண்டாம் படி, பேசுவதை விட நாங்கள் விரும்புவதை செய்வதற்கு அவதானம் கொடுப்பது....

மூன்றாவது படி, வேலை செய்வதற்கும் பேசுவதற்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்வது.

வேலை செய்வது என்பது எங்கள் இடத்திலிருந்து எழுந்து, வெளியே சென்று வேலை முடிவதற்குச் செய்ய வேண்டியதைச் செய்வதாகும்.

பேசுவது என்பது வார்த்தைகளில் விடயங்களை விளக்குவதாகும்,

இதற்கு சில சமயம் நிறைய நேரம் எடுக்கும் அல்லது எங்கும் செல்ல முடியாமல் ஆக்கிவிடும்.

ஒவ்வொரு வெற்றிகரமான நபரும் ஏற்றுக்கொண்ட ரகசியம் இது.

நடவடிக்கை எடுப்பது அல்லது இலக்கை அடைய ஆர்வத்துடன் வேலை செய்வது எங்களை மேம்படுத்துவதற்கான அழகான வழிமுறை.

நாம் பயந்தாலும், அல்லது எத்தனை தெரியாத தடைகளை நாம் எதிர்கொண்டாலும்,

நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது செயற்பட வேண்டும்.

நாம் செயலாற்றும் போது,

நிறைய கற்றுக்கொள்வோம்,

புதிய யோசனைகள் உருவாக்குவோம்,

நாம் வளர்வோம்,

நாம் மிகவும் ஆரோக்கியமான நபராக மாறுவோம்.

எண்ணற்ற நன்மைகளைப் பெறுவோம்.

எல்லா வெற்றியாளர்களையும் பார்த்தால்....

அவர்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரே ஒரு பதில்தான் கிடைக்கும்.

அவர்கள் செயலாற்றினார்கள்.

முன்னோக்கி நகர்ந்தார்கள் என்பதே உண்மையான பதில்.

சில சிறிய, பெரிய தடைகளை சந்தித்தாலும் அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

அவர்கள் இறுதியில் வெற்றியைக் கண்டறிந்து தங்களை மேம்படுத்திக் கொண்டார்கள்.

நாம் இலக்கை நோக்கி நகரும் போது,

நாம் சிறப்பாக இருக்க வேண்டிய இடங்கள்...

மந்தமாக இருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் எவை என்பதை அது நமக்கு உணர்த்துகிறது.

நாம் பேசுவதை குறைப்போம்...
செயலாற்றுவதை கூட்டுவோம்...

---



**சுஜப் எம். காசிம்**

# நவீன அரசியல் கலாசாரத்துக்கு மதச் சிந்தனைகள் அவசியமா?




அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் நூற்றாண்டு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்துக்கள், நாட்டின் ஐக்கியத்துக்கு மதங்களின் இருப்பு அவசியம் என்பதை வலியுறுத்தியிருந்தது. மதங்கள் தோன்றிய தொன்மைக்காலங்களில் இருந்த உலகம் இன்று இல்லை. இதனால், நவீன போக்குகளால் ஏற்பட்டுள்ள நடைமுறைப் பிரச்சினைகளுக்கு சமயங்கள் தீர்வின்றி தவிப்பதை மறைமுகமாகச் சொன்ன ஜனாதிபதி, இவை

நவீன சிந்தனையின் அடிப்படையில் தீர்க்கப்பட வேண்டும் என்கிறார். மக்களின் நம்பிக்கைகளைத் திருப்திப் படுத்தும் தீர்வுகளை முன்வைக்கும் மதங்களால் தான், எதிர்காலத்தில் நிலைக்க முடியும் என்பதும் ஜனாதிபதியின் மறைமுகக் கருத்தாகும். நாட்டின் தலைவர் என்ற வகையிலும் தீவிர தேடலுடையவர் என்ற அடிப்படையிலும் அவரது உரையிருந்தது.

மதங்களின் தோற்றுவாய்ப் பிரதேசங்களிருந்து பிறப்பவையே கலாசாரம். இது, மதங்களின் தத்துவத்தைப் பறைசாற்றுவதில் பிரதான பங்கு வகித்தாலும், மதங்களின் அடிப்படையைப் பாதுகாப்பது நம்பிக்கை மாத்திரமே! இந்த நம்பிக்கைகளால் எந்தப் பிரச்சினைகளும் ஏற்படப் போவதில்லை என்பதற்கு பிரித்தானிய பிரதமர் இந்துவாக இருப்பதையும், லண்டன் மாநகர மேயராக முஸ்லிம் இருப்பதையும் உதாரணம் காட்டியிருந்தார் ஜனாதிபதி. இவ்விருவரும் தங்களது கலாசார அடையாளங்களைத் தூக்கிப்பிடித்திருந்தால் இப்பதவிகளுக்கு வந்திருக்க முடியாது என்பதுதான் ஜனாதிபதியின் நவீன கருத்தியல். இதுபோன்று ஸ்பெயினிலுள்ள ஐபீரியன் தீவுகளில் இஸ்லாமியரின் ஆட்சி நிலவினாலும், இஸ்லாத்தின் கலாசாரம் அங்கு கோலோச்சவில்லை எனக் கோடிட்டும் காட்டினார் அவர்.

எனவே, அடிப்படையைப் பின்பற்றுவதில் எந்த முரண்பாடுகளும் ஏற்படப்போவதில்லை. கலாசார அடையாளங்களைத் தூக்கிப்பிடிப்பதுதான் அடிப்படைவாதத்தை தோற்றுவிக்கிறது என்ற முடிவுக்கு நவீன உலகம் குறிப்பாக இந்து, பசுபிக் மற்றும் ஆபிரிக்க பிராந்தியங்கள் வரவேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு.

நாகரீகங்களை நோக்கி மதங்களை நகர்த்த வேண்டும் என்பது அடிப்படை அகீதாவில் முரண்பட்டல்ல. இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களிலிருந்து (புனித குர்ஆன், ஹதீஸ்) கிடைக்கும் ஆதாரங்களும் அதற்கு மேலாக (“இஜ்மாஉ, கியாஸ்”) இமாம்களின் ஏகோபித்த முடிவில் பெறப்படும் முடிவுகளிலும்தான். இத்தகைய மிகப்பெரிய இமாம்கள், உலமாக்களை உள்ளடக்கிய அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை முஸ்லிம்களின் மரியாதைக்குரிய ஒரு அமைப்பாகவே கருதப்படுகிறது. இந்த அமைப்பு நாட்டின் சுதந்திரத்துக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருப்பதற்கு பல அடிப்படைக் காரணங்கள் இருந்திருக்கின்றன.

முதலாவது உலக யுத்தத்துக்குப் பின்னர் உலகில் நிலவிய சூழல், இஸ்லாத்தின் நேரிய சிந்தனைகள், பாதைகளுக்கு குறுக்காகவும், களங்கமாகவும் இருந்ததால் இவற்றில் முஸ்லிம்கள் சிக்குண்டு, நெறி பிறழ்வதைத் தடுத்து, நேர்வழிகாட்டவே அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை உருவாக்கப்பட்டிருக்கிறது. நமது மூத்த உலமாக்கள் இதில் கவனமாக இருந்திருப்பது மாத்திரமே போதும், சகல முஸ்லிம்களும் இந்த அமைப்பை ஏகமனதாக ஆதரிக்க. நேரிய கலீபாக்களின் (இஸ்லாமிய ஆட்சியாளர்கள்) அரசாங்கத்தையே புரட்டுமளவுக்கு வியூகங்களும், சதிகளும் தீட்டப்பட்ட காலத்தில் இப்படியொரு அமைப்பை உருவாக்கச் சிந்திப்பது சாமான்ய விடயமுமல்ல.

எனவே, இந்தப் பயணத்தின் வரலாற்றுத் தடயங்களை தேடியறிவது இலங்கை முஸ்லிம்களுக்கு பொறுப்பாக்கப்படுகிறது. இந்த அறிதல்கள்தான் இப்போது முஸ்லிம்களுக்குள் ஏற்பட்டுள்ள சில்லறைப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்.

மேலும், இந்தச் சில்லறைப் பிரச்சினைகள் பெரிதாகி, விஸ்வரூபமாகி முஸ்லிம் சமூகத்தை அழிக்கும் ஆபத்திலிருந்து காப்பாற்றுவது, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் வரலாற்றுப் பொறுப்பாகிறது. இதை, இவ்வமைப்பினர் உணர்வது அவசியம்.

எட்டாயிரத்துக்கும் அதிகமான உலமாக்களைக் கொண்டுள்ள ஜம்இய்யதுல் உலமா சபையை மாற்று மத சகோதரர்கள் நோக்கும் கோணங்களில்தான், அரசாங்கமும் நோக்கப்போகிறது. பன்முக பரிமாணங்களில் வளர்ந்துள்ள பல மதங்கள் உள்ள நாடு இது. எனவே, முஸ்லிம்கள் மாத்திரம் நவீனத்தை புறந்தள்ளி சமூக இணக்கப்பாடுகளைக் கொண்டுவர முடியாது. மதங்களுக்கு மத்தியில் புரிந்துணர்வைக் கொண்டு வருவதற்கான பிரதான பாதை, நவீனத்தை இணங்கிக்கொள்வதிலேயே இருக்கிறது. இந்த இணக்கப்பாடுகள் இல்லாமலானதால்தான், மதங்களுக்கிடையில் அல்லது மதங்களின் பேரில் மோதல்கள் உண்டாகின. நம்பிக்கைகளுக்காக மதங்கள் மோதியது கிடையாது. கலாசார அடையாளங்களைக் காப்பாற்ற அல்லது தூக்கிப் பிடிக்கப் புறப்பட்டதில்தான் மோதல்கள் எழுந்திருக்கின்றன.

எனவே,நாட்டில் ஏற்படப்போகும் நவீன அரசியல் கலாசாரத்துக்கு ஏற்ப மக்களைப் பழக்கும் பணிகளை, அதில் நம்பிக்கையூட்டும் வேலைப்பாடுகளை மத அமைப்புக்கள் செய்ய முன்வர வேண்டும். நூற்றாண்டின் காலடியில் பயணத்தை ஆரம்பிக்கும் ஜம்இய்யதுல் உலமா சபைக்கு ஜனாதிபதி சொல்லியதும் இதைத்தான். முஸ்லிம் விவாகம், விவாகரத்துச் சட்டம், சமூக இணக்கப்பாடுகளுக்குத் தடையாகவுள்ள சமயப் பழமைகளை கைவிடும் மனநிலை அல்லது அதன் அடிப்படையைப் புரியும் அறிவு, அடையாள அரசியலுக்கு முன்னுரிமையளித்தல் மற்றும் வேறுபாடுகளிலுள்ள பிடிவாதங்களை இல்லாமல் செய்ய வேண்டிய நவீனத்துக்கு சகலரும் வரவேண்டியுள்ளது. முஸ்லிம் சமூகத்தில் இந்தப் பணிகளுக்கு முன்னோடியாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவும்,தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் முன்வர வேண்டும். இந்தப் பணிகளில் முஸ்லிம் சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் அவசியம் பங்கெடுப்பதே முஸ்லிம்களின் பின்னடைவுகளை முன்னேற்ற உதவும்.

# அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் 100வது ஆண்டு விழா

(அஷ்ரப் ஏ சமத்)

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் 100வது ஆண்டு விழா 19 ஆம் திகதி வியாழக்கிழமை பண்டாரநாயக்க் ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உலமா சபையின் தலைவர் அஷ்ஷேக் றிஸ்வி முப்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கௌரவ அதிதியாக பிரதம மந்திரி தினேஸ் குணவர்த்தன, மற்றும் சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்த்தன, அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ச, விதுர விக்கிரமநாய்கக், அலி சப்ரி, நசீர் அஹமட், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆளுனர் ஏ.ஜே. முசம்மில் , பாக்கிஸ்தான் பங்கதேஸ், சவதிஅரேபியா, பலஸ்தீன், துருக்கி , போன்ற நாடுகளின் தூதுவர்கள், முப்படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், உட்பட விசேட பிரமுகர்கள் வருகை தந்திருந்தனர்.

இந் நிகழ்வில் ஜம்மியாவின் நூற்றாண்டை முன்ணிட்டு தபால் உரையும் 25 ருபா பெருமதியான முத்திரை வெளியீட்டு வைக்கப்பட்டு ஜனதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் தபால் ஊடக இராஜாங்க அமைச்சர் பதில் தபால் மா அதிபரும் கலந்து கொண்டனர்.










## வேட்புமனு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அவதானிக்க முடிந்துள்ளது. அரசியலின் சுயநலப் போக்குகளும்,எதையும் சாதிக்க இயலாத பலவீனங்களையும் புரிந்துகொண்டதால்தான்,இந்நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.கடைசி நேரம் வரைக்கும் கல்விமான்கள் மற்றும் சமூக முன்னோடிகளை தேர்தலில் நிறுத்தும் கட்சித் தலைமகளின் முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்துள்ளன.நாடு பூராகவும் நிறுத்தப்பட்டுள்ள இந்த வேட்பாளர்கள் எந்தளவில் ஊரின் முன்னேற்றத்துக்கு உழைக்க முடியும். ஊரின் தேவைகளுக்கான அடிமட்ட முயற்சியிலிருந்துதான்,சமூக சிந்தனைகள் வளப்படுவதுண்டு.

இதனால்,பொதுவாக இந்த உள்ளூராட்சித் தேர்தல் சமூகத்தில் வளர்ந்து பொதுத் தொண்டனாக ஒருவனைப் பக்குவப்படுத்தும் பயிற்சிக்களமாகவே பார்க்கப்படுகிறது.இம்முறை, வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் இந்தளவு மோசமான நிலைமைகள் ஏற்பட்டதற்கு தலைமைத்துவப் பண்புகள் சீரழிந்துள்ளதே பிரதான காரணம்.இந்தச் சீரழிவு பல கட்சிகளைத் தோற்றுவித்து,பல கிளைகளை வளர்த்தது.இதனால்,போட்டியிட முன்வந்துள்ள வேட்பாளர்களை அவதானிக்கும் மக்கள், வாக்களிப்பிலிருந்து விலகி,அரசியல் களத்தை நகைப்புக்கிடமாக நோக்குகின்றனர்.இது,ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள சந்திகள், கடைகள்,பொதுக் களங்களின் பேசுபொருளாகவும்,விமர்சனப் பார்வைகளாகவும் அமைந்துள்ளன.சமூகத்தின் அடிமட்டக் கோட்பாடுகளுக்குப் பயிற்சியளிக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் இந்தளவு மலினப்பட்டுள்ளமை சமூக ஆர்வலர்களை கவலைக்குட்படுத்தி உள்ளது.

# ஆட்டம் காட்டும் இந்திய அணி



அப்ரித் வஸீர்



இலங்கை அணியின் இந்திய சுற்றை தொடர்ந்து இந்தய அணி தற்பொழுது நிவுசிலாந்து அணியுடன் தொடரை விளையாடிக்கொண்டிருக்கிறது. இந்திய அணி வீரர்கள் பலரும் தமது விசித்திர திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக சூரிய குமார் யாதவ், சுப்மன் கில், முஹம்மத் ஷமி, விராத் கோலி ஆகியோர் நஞ்சத்திரங்களாக மின்னுகின்றனர்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து 3 ஒரு நாள் போட்டிகள் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்று வருகிறது. முதல்கட்டமாக 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. ஏற்கனவே ஹைதராபாத் மைதானத்தில் நடந்து முடிந்த முதல் ஒரு நாள் போட்டியில் இந்தியா 12 ரன்கள் வித்தியாசத்தில் பாரிய வெற்றியைக் கண்டது. இதன் மூலம் 2 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.



இதையடுத்து, வெற்றியை தீர்மானிக்கும் 2ஆவது ஒரு நாள் போட்டி ராய்ப்பூர் மைதானத்தில் நேற்று நடந்தது. இதில், டாஸ் வென்ற ரோகித் சர்மா என்ன கேட்க வேண்டும் என்பதை மறந்து தவித்துள்ளார். அதன் பிறகு சிறிது நேரம் கழித்து பௌலிங் தேர்வு செய்தார். இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் ராய்ப்பூர் மைதானத்தில் மோதும் முதல் போட்டி என்பதால், இந்த மைதானம் எப்படி இருக்கும் என்று யாருக்கும் தெரிந்திருக்காத ஒரு இக்கட்டான நிலையில், டாஸ் இந்தியாவிற்கு சாதகமானது.

இதையடுத்து, முதலில் ஆடிய நியூசிலாந்து அணி தட்டி தடுமாறி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 108 ரன்கள் எடுத்தது. கடந்த போட்டியில் 78 பந்துகளில் 140 ரன்கள் குவித்த பிரேஸ்வெல் இந்தப் போட்டியில் 22 ரன்களில் வெளியேறினார். அதிகபட்சமாக கிளென் பிலிப்ஸ் 36 ரன்கள் எடுத்தார். இறுதியாக நியூசிலாந்து அணி 34.3 ஓவர்களில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 108 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்தியா சார்பில் முகமது ஷமி 3 விக்கெட்டுகளையும், ஹர்திக் பாண்டியா மற்றும் வாஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சிராஜ், தாக்கூர், குல்தீப் யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர், எளிய இலக்கை துரத்திய இந்திய அணிக்கு ரோகித் சர்மா நல்ல தொடக்கம் அமைத்துக் கொடுத்தார். அவர் 50 பந்துகளில் 51 ரன் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த விராட் கோலி 11 ரன்களில் வெளியேற, சுப்மன் கில் வெற்றிக்கு தேவைப்பட்ட 2 ரன்களை பவுண்டரி அடித்து எடுத்துக் கொடுக்க இந்தியா 20.1 ஓவர்களில் 2 விக்கெட் இழந்து 111 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இஷான் கிஷான் 8 ரன்னும், சுப்மன் கில் 40 ரன்னும் எடுத்து களத்தில் இருந்தனர். 2ஆவது ஒரு நாள் போட்டியில் வெற்றி பெற்றதோடு 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரையும் 2-0 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியுள்ளது.

இந்த நிலையில், ஐசிசி ஒரு நாள் போட்டியில் தரவரிசையில் இடம் பிடித்திருந்த நியூசிலாந்து இந்தியாவுக்கு எதிரான 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரை 0-2 என்று இழந்ததன் மூலமாக ஐசிசி தரவரிசைப் பட்டியலில் நியூசிலாந்து 2ஆம் இடம் பிடித்துள்ளது. 28 போட்டிகளில் விளையாடிய நியூசிலாந்து 3166 புள்ளிகள் பெற்று 113 ரேட்டிங்கில் 2ஆவது இடம் பிடித்துள்ளது. ஏற்கனவே 2ஆவது இடத்தில் இருந்த இங்கிலாந்து முதலிடம் பிடித்துள்ளது. இந்தியா 43 போட்டிகளில் விளையாடி 4847 புள்ளிகள் பெற்று 113 ரேட்டிங் பெற்று 3ஆவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.